ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

திருச்சின்னமாலை.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்க வெளியீடு, 29.

இது
ஸர்வமங்கள விக்ருதியாண்டு
துலாத் திங்கள் நாலாரும் நன்ளுள்
தீபாவளிப்பண்டிகையன்று திருவல்லிக்கேணி
திருவஹோபிலமடத் திருநரசிங்கன் திருவடிவாரத்தில்
இடப்பெற்ற காணிக்கை.

9—11—1950.

முதற் பதிப்பு—நவம்பர் 1950

Kabeer Printing Works, Madras-5

ஸ்ரீ:

உள்ளுறை.

பக்கம்.

முகவுரை. v

[பந்தல்குடி பாரத்வாஜமாடபூசி ரெ. திருமலை அய்யங்கார், தமிழ் வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.]

திருச்சின்னமாலை.

[ஷை ஷை ஷை]

1. அவதாரிகை. ... 1.
2. நூற்பெயரிடும் நுண்மதி. ... 3.
3. பிரபந்தாவதாரகாலம். ... 4.
4. இதற்கு மூலம் எது? ... 5.
5. மாலையமைப்பு. ... 15.
6. மாலைப் பொருள். ... 15.
7. திருநாமங்கள். ... 17.
8. மெய்விரதமான்மியத்திருச்சின்னம். ... 20.
9. முன்னோர் மொழிபொன்னேபோல் போற்றும் பெற்றி. ... 22.
10. பன்மணித் தொகுதி. ... 30.
11. எதிராசரைப் போற்றியுள்ளமை. ... 33.
12. பரிமேலழகர். ... 33.
13. அழகிய அமைப்பு. ... 35.
14. பின்புள்ளோர் போற்றியவாறு. ... 36.
15. முற்றுரை. ... 38.
16. திருச்சின்னமாலை. ... 41.

[மூலமும் குறிப்புரையும்]

ஸ்ரீ:

முகவுரை.

உன்னரு ளன்றி யெனக்கொரு நற்றுணை யின்மையினு
லென்னிரு வல்வினை நீயே விலக்கி யிதங்கருதி
மன்னிய நற்றிரு மந்திர மோதும் பொருணிலையே
பொன்னரு ளாலரு ளாய்புகழ் தூப்புற் குலவிளக்கே.

—(பிள்ளையந்தாதி. 15.)

தேவர் முனிவர்களுஞ் சித்தர்களும் பத்தர்களும்
பூவின் மழைபொழிந்து போற்றியே - தாவி
யுலகளந்த மாலை யுணர்ந்துகக்குந் தூப்புற்
குலகுருவே யெங்கள் குரு.

—(தேசிகர் நூற்றந்தாதி. 26.)

பூவின்மன்னு மங்கைதாள் பொருந்துமார்ப னும்புகழ்
யாவுமங்கம் வேதநான்கு பாடுமாற னுகம
மேவியோங்கு பாச்சியம் விரித்த யோகிநாமமே
நாவிலங்கு தூப்புலய்யர் பாதநண்ணு நெஞ்சமே.

—(ஸ்ரீ வேதாந்த தேசிகன் துதி.)

செய்யாட் குகந்த திருமார்பன் வேங்கடச் சீர்வரையான்
மையாருங் கண்டன் மலரய னேத்தி வணங்குவளைக்
கையா னருளிற் கனிந்துயர் தூப்புற் கதிரனைய
வையா! சரண மடைந்தேன் றுளுக்க டைக்கலமே.

—(ஸ்ரீ வேதாந்ததேசிகன் அடைக்கலப்பத்து. 10.)

திருமலை மால் திருமணியாய்ச் சிறக்க வந்த பேராசிரியர் **ஸ்ரீமத் வேதாந்த தேசிகர்.** அத்யாச்சரியமான அபார பாண்டித்யமும், அற்புதமான அநுட்டானமும், அனைவரும் ஆதரிக்கத் தக்க ஆத்மகுண பூர்த்தியும், விசேடித்துப் போற்றத் தக்க விரக்தியும் ஒருங்கே அமைந்தவர் இம் மஹான். இச் சந்தமிகு தமிழ் மறையோன் அவதரித்தருளியிராவிடில் கலியுலகில்,பண்டித வுலகில், ஸ்ரீ வைஷ்ணவ வுலகில், இவ்விருள்தருமா ஞாலத்தில் இன்பம் காண்பது அரிதினும் அரிதே.

இவ்வவதார புருஷச்ரேஷ்டர் எண்ணில் பல்குணங்கள் நன்கு பொருந்தியவர். ஆசாரியர்கட்கு அணிகலமான ஞான, பக்தி, விரக்திகள் என்ற முக்குணங்கள் இவரை அடைந்து நிறம் பெறுவன. இந்நல்லாசிரியரது கவித்திறன், சாஸ்த்ர பாண்டித்யம், தமிழ், பிராகிருதம் முதலிய பல பாஷைகளில் அளவு கடந்த வல்லமை, எளிய நடையில் ஸ்தோத்ரங்கள் இயற்றும் பெற்றி, கம்பீர நடையில் சாஸ்த்ரீயக்ரந்தங்கள் அருளிச்செய்யும் அழியா வழகு முதலியன ஒப்புயர்வற்றன.

இந்நாவலருந் தென்வடமொழி நற்பொருள் பெற்ற நம்பி இவ்வுலகில் தோன்றி அருளிய திவ்ய ஸூக்திகள் அனந்தம். இம் மறைமுடித்தேசிகனுரது சாஸ்த்ர பாண்டித்யச் சீர்மையை சததூஷணீ, தத்வமுக்தாகலாபம், ஸர்வார்த்தஸித்தி, ந்யாய பரிசுத்தி, ந்யாயஸித்தாஞ்ஜநம், ஸேச்வரமீமாம்ஸை, மீமாம்ஸா பாதுகை என்னும் அரும் பெரு நூல்கள் நன்கு அறிவிக்கும். அரிய பெரிய சீரிய உயர்ந்த அழகிய வியாக்கியானங்களை அருளிச் செய்வதிலுள்ள அபார அற்புதமான சக்தியை தத்வ டீகை, கீதாதாத்பர்ய சந்திரிகை, கீதார்த்தஸங்க்ரஹரக்ஷை, ஸ்தோத்ரபாஷ்யம்,சதுச் ச்லோகீபாஷ்யம், கத்யபாஷ்யம் என்னும் திவ்ய க்ரந்தங்கள் தெற்றெனத் தெளிவிக்கும்.ஆதிமஹா கவிகளைப் போலே சாலச் சிறந்த காவ்ய நாடகங்களை இயற்றுவதில் ஒப்பற்ற நைபுண்யத்தை யாதவாப்யுதயம், ஸங்கல்பஸூர்யோதயம், ரகுவீர கத்யம், ஹம்ஸ ஸந்தேசம், ஸுபாஷிதநீவி முதலியவைகளும், பாதுகா ஸஹஸ்ரம் முதலிய பல பல துதி நூல்களும் புலப் படுத்தும். அபார கருணாநிதியான அச்சுதனின் அபிநவ தசாவதாரமெனக் கொண்டாடப் பெற்று வரும் ஆழ்வார் அருளிச் செயல்களில் ஆழ்ந்து அகங்குழைந்து உருகி நிற்கும் அளவிலாப் பெருமை த்ரமிடோபநிஷத் தாத்பர்யரத்நாவளி, த்ரமிடோபநிஷத் ஸாரம் முதலியவற்றால் மூதலிக்கப் பெறும். அமிழ்தினுமினிய தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் அனைவரும் போற்றியுகக்கத் தக்க ஆச்சரியமான பேரறிவு பெற்று சீரிய நற்கவிகளையியற்றும் பெற்றி '' தேசிகமாலை '' யென நற்றமிழர் நன்கு போற்றி வரும் துய்யதமிழ் இருபத்துநான்கு பிரபந்தங்களினால் தலைமைபெற்று நிலைத்து நிற்கும். அநுட்டான விஷயங்களில் ஆழ்ந்து சிறந்த தேறிய ஆராய்ச்சிகளைச் செய்து நிகரற்ற நிர்ணயங்களை வெளி யிடும் அபூர்வ வல்லமை ஸச்சரித்ரரக்ஷை, ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷை,

நிக்ஷேபரக்ஷை முதலியவற்றுல் நன்கு உணர்த்தப் பெறும். கூரிய சீரிய ரஹஸ்யார்த்தங்களேயும் வெளியிட்டு ஸம்ஸாரிகளே உய்விப்பதில் உண்டாகிய அஸாதாரணமான பரமகருணே ஸம்ப்ரதாய பரிசுத்தி முதலிய ரஹஸ்யங்களினுல் ஸதஸ்யமாக விளங்கும்.

அதிமாநுஷதிவ்யப்ரபாவங்களேயுடைய ஆசார்ய ஸார்வ பௌமர் நம் வேதாந்ததேசிகசிகாமணி. கடலளவாயதிசை யெட்டினுள்ளும் மிடைதந்த கலியிருளே உபதேசங்களாலும், அநுட்டானங்களாலும், பல பல திவ்யக்ரந்தரசனைகளாலும் அறவே போக்கியருளிய அந்தணர் திலகமே இத்தூப்புல் வள்ளல். பகவத் பாகவத பக்திப் பெருஞ்செல்வமும் ஐஹிகஸுகங்களில் அதிமாத்ரவிரக்தியும் இவ்விசுவாமித்திரகுலதிலகரது நித்ய சரித் திரங்களினுல் நிலே நின்று விளங்கும்.

சீரொன்று தூப்புற் றிருவேங் கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.

—(தேசிகமாலேத்தனியன்.)

"தேசிகர்நூற்றந்தாதி" (வெளியீடு 2, 14-10-1937); "மறைமுடித்தேசிகனுர்" (3, 14-10-1937); "வேதாந்த தேசிக ரூசல்" (6, 1-6-1939); "தோத்திரமாலே," (7, 19-3-1941); "பரிமுகமாலே," (10, 10-7-1941); "ஸ்ரீ ஆண்டாள் மாலே," (11, 27-7-1941); "ஸ்ரீ பார்த்தசாரதிமாலே," (12, 17-8-1941); "திருவருண்மாலே," (13, 14-11-1942); "தமி ழர் போற்றும் இராமாநுசன். (25-4-1944); "தூப்புல்வள்ளல் பழமொழிச் சிறப்பு," (14, 19-7-1944); "அடைவு அமைக்கும் அற்புதன்," (15, 24-9-1944); "தமிழர்தொழு வேதாந்தவாசி ரியன். 16, 17-12-1944); "திருமாமகள்மாலே," (21, 30-6-1949); "அழகிய சிங்கர் மாலே" (23, 21-10-1949), முதலிய இச்சங்க வெளியீடுகளில் நம் வேதாந்த குருவின் வைபவங்களே யும் அவரது திவ்யஸூக்திகளின் பெருமைகளேயும் பரக்கக் காண்கலாம்.

இத்தூப்புநகர்க்கோமான் எல்லே கடந்த சிறந்த குணங் களுக்குக் கடல் போன்றவர்; மாயாவாதிகளாகிற மதயானேகட்குச்

சிங்கம் போன்றவர் ; தென்னத்தியூரரான தேவப்பெருமாளுடைய திருவருளுக்குப் பேரிலக்கானவர் ; அப்பேரருளாளனுடைய அற்புதமான அழகை இடைவீடின்றி அநுபவித்து, வைகுண்ட வாஸத்திலும் தனக்கு விருப்பமில்லையென்று அருளிச் செய்த வித்வந் மணி ; அநாதியான விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தைப் பல உயர்ந்த க்ரந்தங்களினால் பரிபோஷித்தருளினவர் ; கருணைக்கடல்; அற்புதமான வைபவங்கள் அமைந்த நற்குண நன்னிதி ; உலகம் நிறைந்த புகழாளர் ; ஸர்வஜ்ஞர் ; ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர் ; ஞானப்பெரும் புகழ் படைத்த தேசிகர் ; மன்மதனிலும் விஞ்சிய வடிவழகார்ந்தவர் ; மேன்மையான கவித்வசக்தி பொருந்தியவர் ; பரமபவித்திரமான நடத்தையுள்ளவர் ; வித்தகர் ; வேதியர் ; வேதாந்த தேசிகர்.

"**தேசிகமாலை**"யிற் றிகழும் "**திருச்சின்னமாலை**" எனும் நன்னூல் ஆராய்ச்சிக் கட்டுரையாக அத்திருநாமத்துடன் இத்தமிழ்ச்சங்க வெளியீடாகப் பிரசுரிக்கலாயிற்று.

இச்சங்க வெளியீட்டிற்குப் பூரணவுதவி புரிந்தவர் இச்சங்கத்துப் பேரபிமானியும், செந்தமிழார்வத்திருவுடையவரும், தேசிக பக்தரும், தொண்டர் சீர்பரவுந் தகவுடையவரும், அந்தணச் செல்வரும், சம்பிரதாயாபிவிருத்தியில் பூரண நன்னோக்குடையவரும், நல்லாரிணக்கத்தையே நாடு பவரும் உபகாரசீலரும் ஆகிய கொடியாலம் வேங்கடேசன் என்னும் கே. **துரைஸாமி அய்யங்கார் அவர்கள்.**

இவ்வள்ளலார் சிறந்த செந்தமிழபிமானி ; "திருப்புகழ்" பாடுவதில் விசேட அநுபவம் முதிர்ந்தவர். இவர் இயற்றிய ஒரு பாட்டு இங்கு தருவேன்.

"அத்திகிரி யருளாள னன்பே—நமோ நமென
வேங்கட வந்நாத குருமணியே—நமோ நமென
மெய்யனோ டயக்ரீவன் தகவே—நமோ நமென
—தூப்புல் காவலனே !

உபயவே தாந்தச் சுடர்வடிவே—நமோ நமென
திருச்சின்ன மாலை யருள்தேவே—நமோ நமென
திருப்பாவை கோதை புகழ்தேசிக—நமோ நமென
—பல்கலைப் பாவலனே !

எம்பெருமா னருள் நிலமே—நமோ நமென
கவிவாதி சிங்கமென்ற வாழ்வே—நமோ நமென
ஞானவை ராக்ய குண நிதியே—நமோ நமென
—தொண்டர் கற்பகமே !

சர்வ தந்திர சுதந்திரரே—நமோ நமென
சரணநெறி தோற்றும் மதிஎந்தாய்—நமோ நமென
அடியேனை வாழ்விக்க வருவாய்—நமோ நமென
—அருள்தாராய்.''

என்பதுவே அது.

அவரும் அவரது உற்ருர் உறவினரும் திருத்தக்க செல்வமும் திருவருளும் நித்யமாகப் பெற்றின் புறுமாறு அநுக்ரஹிக்க வேண்டு மென்று சீரார் தூப்புல் திருவேங்கட நாதனைத் தொழு வோமாக.

வாழ்க சந்தமிகு தென்தமிழ். வாழ்க தேசிகத் தொண்டர் குழாம்.

பொங்கும் மங்கலம் எங்குந் தங்குக.

நானிலமுந் தான்வாழ நான்மறைகள் தாம்வாழ
மாநகரின் மாறன் மறைவாழ —ஞானியர்கள்
சென்னியணி சேர் தூப்புல்வேதாந்த தேசிகரே !
இன்னமொரு நூற்ருண் டிரும்.

ஸ்ரீரங்கவிலாசம்,
திருவல்லிக்கேணி
9–11–50.

ப. ரெ. திருமலை அய்யங்கார்,
காரியதரிசி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :



திருச்சின்னமாலை.

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை அய்யங்கார்,
தமிழ் வித்துவான், காரியதரிசி,
திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

1. அவதாரிகை.

தம்மை வணங்கினார்க் கெஞ்ஞான்றுந் தம்முடைய
தன்மை யளிக்குமி ராமாநுசர்போல் —உம்மை
வணங்கு மடியேற்கு வாதிசிங்கரே நீர்
இணங்கும் வகையருள்வீ ரின்று.

—(தேசிகர்நூற்றந்தாதி, 97.)

கண்டார் கரையைக் கடந்தார் பவக்கடலை
அண்டாத வார்வ மடைந்திட்டார்—வண்டாரும்
கொந்தலர்பூந் தூப்புல்வருங் குற்றமில்சீர் வாதிசிங்கர்
செந்தமிழ்நூல் சிந்தித் தவர்.

—(தேசிகர்நூற்றந்தாதி, 91.)

மாமலர் மன்னிய மங்கை மகிழ்ந்துறை மார்பினன் திருநாராயணன். அவனே மறை முடித்தேசிகன். அவன் தாள் நற்றாள். அத்தாண்மலர் சூடியவன் தொல்லருள் மாறன். அவன் துணையடிக்கீழ் வாழ்வை யுகந்தவர் இராமாநுசமுனி. அவர் வண்மை போற்றும் சீர்மையர் " தூப்புற் பிள்ளை " யாம்

"வேதாந்தகுரு." அவரது பொற்றாமரையடியையே என்றும் நினைந்திருப்பார் பாதம் அடியேன் சென்னிதனிற் சூடும்மலர்.

"திருவாய் மொழித்தேவர்" நம்மாழ்வார். "திருமொழித் தேவர்" திருமங்கையாழ்வார். அதுபோல திருச்சின்னமாலைத் தேவர் தூப்புல் திருவேங்கடமுடையான் என ஆன்றோர்கூறுப. அணங்குகண்டவனே நன்மை யளித்துக் காக்கவல்லவன். திருக் கண்டவன் ஞானத்தமிழன். திருவின் திருவை உள்ளவாறு கண்டு, கண்டவாறு உரைத்தவனே கவிவாதி சிங்கத் தேவாய் விளங்கிய நம் வேதாந்த தேசிகன். செய்யதாமரைத் திருமறு மார்பனே திருச்சின்னன். (சின்னம் - அடையாளம்). அவனே சுந்தரன். வெற்றித்திருவால் விளங்குபவனே திருமகள் கேள் வனாகிய ஒருவன். தேனவேதியர் தொழுந் தெய்வம் அவனே. (தேனவேதியர் - தேனரும் வேதியரும். தேனர் - ஆத்மாவைத் திருடுபவர்.) அவனே அத்திகிரித்திருமால். (அத்திகிரி, ஹஸ்திகிரி. திகிரி - சக்கரம். அத்தி - யானை.) அவனே பேரருளாளன். அவனே தேவாதிராஜன். அவனது திருச்சின்னமே எங்கும் முழங்குவது. 'திருச்சின்னம்' என்பது எம்பெருமானுடைய ஸந்நிதி களில் ஸேவிக்கப் பெறுகிற ஒரு வாத்யவிசேஷம். அதன் ஓசை யின் காம்பீர்யமும் இனிமையும் ஒப்பற்றன. அவை வருணிக் கவும் இயலாது. ஸ்ரீ தேவப்பெருமாள் ஸந்நிதியில் ஸேவிக்கப் பெறும் திருச்சின்னவாத் யவோசை ஸ்வாமிதேசிகன் திருவுள்ளத் தைக் கவர்ந்தது. அவ்வினிய ஓசையில் ஒரு நுட்பத்தைக் கண்டார் வேதசிரத் தேசிகனார். திருச்சின்னத்தை முழக்கி உலகை உய்யக் கொண்டவரே நம் ஆரியசிகாமணியான வேதாந்தவாரியன். அண்ட கோளகைக்கு அப்புறத்து அண்டர் கோன் அமரும் அந்தமில் பேரின்ப வீடு எய்திய ஓர் விஞ்சையர் கோதை புண்டரீக மென்பதத்தியைப் புகழ, அப்பிராட்டியும் மிக மகிழ்ந்து அம்மங்கையாரிடம் வண்டாரும்மது மாலையை அளிக்க, அக்கன்னி அம்மாலையை யாழிடைப் பிணித்து அயனுலகம் எய்தினள் என அமுந்தாருள் வாழ்வோனாகிய கம்பநாட்டாழ் வான் பாடியுள்ளான். தூப்புல்இறை தமது பேரின்ப அநுபவ வெள்ளமேலீட்டால் திருச்சின்னத்துக்குப் பாமாலை சாத்தி மகிழ்ந்தார். திருச்சின்னனை திருமார்பனுக்குத் "திருச் சின்னமாலை" என்னும் நித்யமான நீள் மணங்கமழும் பாமாலை யைச் சாற்றித்திருவுக்குந்திருவாகிய செல்வனை மகிழ்வித்தவர்

தூப்புல்மாபுருடன். திருவின் நாயகனைத் திருக்கொண்டு காட்டி இருவரையும் நன்கு துலங்கவைத்ததனாலன்றோ அத்திரு முன்பே திருவரங்கத்தில் நித்திய வாசஞ் செய்யுந்திருப் பேறு பெற்றான் இத்தமிழ் மறைதந்த வள்ளல் என்பர் பேரறிஞர்.

உலகம் போற்றும் பெற்றியரான தூப்புற்குலமணி தேவாதி தேவனை பேரருளாளனுடைய யாத்ரோத்ஸவாதிகளில் ஊதப் பெறுகிற திருச்சின்னத்தின் நாதநலம் இருக்கும் இருப்பை அநுஸந்தித்து, அதுபோன்ற நாதவின்பத்தை நல்குமோ இதர தேவதைகளின் பிரயாணகாலத்தில் முழங்கப் பெறும் காஹளாதி வாத்தியங்கள் என்று அநுபவித்து, அந்த அதிமதுரநாதம் மற்றத் தேவதைகட்கு ஸாதாரணமல்லாமையினாலே பகவானுடைய அஸாதாரண குணங்களை நிரூபிக்கக்கருதி அப்படிப்பட்ட உயர் குணங்களை உடைய பெருமாள் எழுந்தருளினார் என்று காட்டுவ தாகத் திருவுள்ளம்பற்றி அருளிச் செய்துள்ளார் இம்மாலையை.

ஏரணி கீர்த்தி இராமாநுசமுனி வண்மை போற்றும் சீரியனான இவ்வேதாந்த வாரியனின் "திருச்சின்னமாலை" யைச் சற்றுச் சிரமேல் அணிந்து அவ் அடியார்க்கு நல்லாரின் இன்னருள் பெற்று இன்புறுவோமாக. சேரவாரும் செகத்தீரே! நல்லன்பர்களே! வம்மின்.

2. நூற்பெயரிடும் நுண்மதி.

பிள்ளை பெற்றுப் பெயரிடுதல் ஒருபேறே. கவிகட்கு மக்கள் அவர்கள் இயற்றும் நன்னூல்களே. பொருத்தமுற நாமகரணம் அமைப்பது தனிவன்மையைத் தெரிவிக்கும். தாம் இயற்றி யருளியநூல்கட்குப் பெயரிடுவதிலேயே தமது முழுவல்லமையைப் புலப்படுத்தும் ஆற்றல் அமைந்தவர் நம்வேதாந்த குருவென்ப. "அபயப்ரதான ஸாரம்"; "அஞ்சலி வைபவம்"; "முனிவா ஹன போகம்"; "தாத்பர்ய ரத்னாவலி"; "பரமபத ஸோபாநம்"; "பரமத பங்கம்"; "பன்னிரு நாமம்"; "பிரபந்த சாரம்"; "ஆகார நியமம்"; "தத்வமுக்தா கலாபம்"; "ஸ்ரீ சங்கற்ப சூரியோதயம்"; "ஸ்ரீ அதிகரண ஸாராவளி"; "தாத்பர்ய சந்திரிகை"; "விரோத பரிஹாரம்" முதலியவற்றை நோக்கிக் கண்டுகொள்க.

தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிச் செய்தது "திருமாலை". "திருமாலை அறியான் திருமாலை அறியான்" என்பது மூதுரை. தென்னரங்க மணவாளர்க்கன்பு மிக்குச் செப்பியது இந்நற்றிருமாலை நாற்பத்தைந்து பாசுரங்களடங்கிய பிரபந்தம். தேசிகனுர் அருளாளப் பெருமாள் தேசின்திறத்தில் ஈடுபட்டுத் திருவாய் மலர்ந்தருளிய திருப்பதிகம் "சின்னத்திரு மாலை" என்ப. பிரணவத்தைச் "சிறுவேதம்" (அமிருதாசு வாதினி. 2) என இவ்வேதாந்தவாரியர் குறிப்பதை இங்கு நினைக. தூப்புல் துரந்தரனின் துய்ய தமிழ் இருபத்து நான்கு பிரபந்தங் களுள் திருவுடன் மாலையாக அமைந்து விளங்குவதே இவரது செய்ய தமிழ் மாலையாகிய "திருச்சின்னமாலை". இது ஒரு தனித் தமிழ்ப் பிரபந்தம்.

3. பிரபந்தாவதாரகாலம்.

ஸ்ரீ தேசிகன் காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் காலத்தில் ஒரு நாள் ஸ்ரீ தேவராஜனுடைய மஹோத்ஸவத்தில் சில அத்வைதி கள் வந்து தங்களை வாதத்தில் ஜயித்தாலல்லது பெரிய காஞ்சி யில் உத்ஸவம் நடத்தக்கூடாது என்று ஆக்ஷேபித்தனர். அச்ச மயம் இயல் கோஷ்டியில் திவ்யப்ரந்தம் ஸேவித்துக்கொண்டிருந்த "சந்தமிகு தமிழ் மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்த குரு" அவர்களுடன் அங்கேயே வாதம் செய்து அவர்களை ஜயித்து உத்ஸவத்தை முன்போல நடத்திவைத்தார். ஆழ்வார்கள் அருளிச் செயல்களான திவ்யப்ரபந்தத்தைக் கோஷ்டியாகப் பகவானுக்கு முன்பே அநுஸந்தித்துக் கொண்டு செல்லக்கூடாது என்று சைவர்கள் ஆக்ஷேபித்த தாகவும், அவர்களை நிரஸித்து, திவ்யப்ரபந்தத்தின் மேன்மையை ஸ்வாமி நன்கு நிலைநாட்டினுர் என்றும் சிலர் கூறுகின்றனர். இவ்வாறு சுலபமாக பிரதிவாதி நிரஸனம் செய்தருளினஸ்வாமியை ஸகல மர்யாதைகளுடன் அவருடைய திருமாளிகைக்கு ஊர்வலமாக எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போகுமாறு ஸ்ரீ தேவாதிராஜன் நியமித்தருள, ஸ்வாமியுடன்கூட ஒரு திருச்சின்னத்தையும் பெருமாளுடன் ஒரு திருச்சின்னத்தையும் உபயோகிக்கும்படி நேர்ந்தது. இந்த விருத்தாந்த விசேடத்தை இப்பொழுதும் ஸ்ரீ தேவப் பெருமாளுக்கு ஒரு திருச்சின்னத்தையே உபயோகித்து உலகில்

பஹிரங்கப்படுத்துகின்றனர். ஸ்ரீ ஸ்வாமியும் அதி புளகாங்கித ராய்த் தம்மை இப்படி விசேஷித்துக் கடாக்ஷித்தருளின பேரருளாளனிடத்தில் கரை புரண்ட பக்திமேலிட்டுத் தம்முடைய திருமாளிகைக்குச் செல்லும்போது அத்திருச்சின்னத்தின்கம்பீர மான ஓசை ஸர்வவேதார்த்தங்களையும் உத்கோஷிக்கிருப் போலே ஸ்வாமியின் திருச் செவியில்பட அவற்றை ப்ரதிபாதித்து "திருச்சின்னமாலை" என்னும் பிரபந்தத்தைச் செய்தருளினர்.

சரணங்கள்.

பெருமாள் கோவிலை	நாடியே—எங்கள்
பேரருளாளரைப்	பாடியே
ஒரு பஞ்சாசத்துச்	சூடியே—இன்ன
முள்ள மீதன்பு	நீடியே
திருச்சின்னமாலை	சாத்தியே

விருத்தம்.

கரதலா மலகம்போல் வேதாந்தத்தைக்
கரைகண்ட கண்டாவதாரர் நாளும்
நிரதராய்க் கச்சியைச்சூழ் திவ்யதேச
நிலையெல்லாஞ் சேவித்து நிதமுந்தாமே
விரதராய்ப் பேரருளா ளரையுமின்னம்
வெண்பரிமுகத் தாரையுமா ராதித்தே
வரதர்திரு வடிச்செந்தா மரையை வாழ்த்தி
வந்திப்பார் திருமலையைச் சிந்திப்பாரே.

—(வேதாந்த தேசிக வைபவப்
பிரகாசிகைக் கீர்த்தனை)

என்பது காண்க.

4. இதற்கு மூலம் ஏது ?

"திருச்சின்னமாலை" என்ற தனிப்பிரபந்தம் தேசிக ருக்கு முன்னிருந்ததாகத் தெரியவில்லை. இது இவரது தனி யான அற்புதசிருட்டி என்னலாம். ஆயினும் இதற்கு மூலம் எதுவாயிருக்கலாம் என்று ஆராய்ந்து பார்க்க அதில் பெற்ற விஷ யத்தைக் கூறுவேன்.

"உலா" வென்பது தமிழ் மொழிக்குரிய தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. தலைவன் வீதியிடைப் பவனி வரும் சிறப்பைப்பற்றிக் கூறுவதாதலின் இது இப்பெயர் பெற்றது. (உலா - பவனி ; நன்னெடுவீதியில் நகரிவலம் வருதல்.) இது, 'முதனிலை பின்னெழுநிலை யுலாவெண்கலி' எனப் பொய்கை யார் புகன்றபடி முதலில் முதனிலை என்ற பிரிவையும், பின்பு எழுநிலை என்ற பிரிவையும், அமைத்து வெண்கலிப் பாவாற் பாடப் படுவது.

முதனிலையாவது :—

'குடி நெறி மரபு கொளல் கொடை விடியல்
நன் னீராடல் நல்லணி யணிதல்
தென்னக ரெதிர் கொள நன்னெடு வீதியின்
மதகளி றூர்தன் முதனிலை யாகும்.'
'ஆதிநிலையே குழாங் கொள லென்றெடுத்
தோதிப் புலவரு முளரென மொழிப.'

என்ற மேற்கூறிய பொய்கையார் சூத்திரங்களிற் சொன்னபடி பாட்டுடைத் தலைவனது உயர்குடிப் பிறப்பு, நல்லொழுக்கம், வம்மிசாவலி, ஏற்றல், ஈதல், வைகறைத்துயிலெழல், நன்னீராடல், நற்பூண்புனைதல், பழமையான நகர மாந்தர்கள் யாவரும் எதிர் கொளநல்ல பெரியவீதிகளில் மதகளிறு முதலிய சிறந்த ஊர்தி களில் உலாப்புரிதல். அதனைக்கண்டு களிக்க அநேகவகையின ராகிய மாதர்கள் குழாங் கொளல் : என்பவற்றை ஏற்குமாறு உசிதமாகப் புனைந்துரைத்தலாம்.

எழுநிலையாவது :—

'ஏழு நிலையும் இயம்புங் காலைப்
பேதை பெதும்பை மங்கை மடந்தை
அரிவை தெரிவை பேரிளம் பெண்ணெனப்
பாற்படு மகளிர் பருவத்தாதல்
நோக்கி யுரைப்பது நுண்ணியோர் கடனே.'

என்று அப்பொய்கையாரே புகன்றபடி பேதைமுதற் பேரிளம் பெண் ஈருயிருக்கிற ஏழுபருவத் தேந்திழைமார்களின் எழில், இயல்பு, உரிமை முதலியவைகளை இனிமையாக இயம்புவதாகும். எழில், இயல்பு என்பன வெளிப்படையாம்.

உரிமையாவது :—

‘ சிற்றில் பாவை கழங்கம் மனேயே
பொற்புறும் ஊசல் பூங்கிளி யாழே
பூம்புன லாட்டே பொழில்விளை யாட்டே
இன்மது நுகரல் இன்ன பிறவும்
அவரவர்க் குரிய வாகு மென்ப.’

என்ற அவிநயனுர் சூத்திரத்திற் சொல்லப்பட்டவைகளாம். இது, வெண்கலிப்பாவாற் பாடவேண்டு மென்பது, பின்னும் அப் பொய்கையாரே, பின்வரும் சூத்திரங்களில்,—

‘ பாட்டுடைத் தலைவன் உலாப்புரி இயற்கையும்
ஒத்த காமத் திளையோர் வேட்கையும்
கலியொலி தழுவிய வெள்ளடி யியலால்
திரிபின்றி நடப்பது கலிவெண் பாட்டே.’

என்றும்,

‘ பேதை முதலா வெழுபருவ மகளிர்கண்
டோங்கிய வகைநிலைக் குரியா ளொருவனைக்
காதல் செய்தலின் வருங்கலிவெண் பாட்டே.’

என்றும் உரைத்திருப்பதனுலும் வலியுறுகின்றது-

தாம் வழிபடுகடவுளார், தம்முடைய ஆசிரியர், தம்மைப் பாதுகாக்கும் அரசர் முதலியவர்களுள் யாரேனும் ஒருவரைத் தலைவராகக் கொண்டு புலவர்களால் அவரவர்களுக் கேற்பப் பாடப் படுவது உலா ; சேரமான் பெருமாள் நாயனுரால் இயற்றப்பட்ட திருக்கைலாய ஞானவுலா, தத்துவராயரால் இயற்றப்பெற்ற ஞான விநோதனுலா, கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக் கூத்தரால் இயற்றப்பெற்ற மூவருலா முறையே இவற்றிற்கு உதாரணங்களாம்.

வடமொழியிலும் தென்மொழியிலும் உள்ள காப்பியங்களில் தலைவன் உலாவரும் பொழுது அங்கங்கே அவனைக்கண்ட மடவார் மயங்கியதும் பலவற்றைக் கூறியதுமாகிய செய்திகள் காணப் படும். இராமாவதாரத்தில் (கம்பராமாயணத்தில்) இத்தகைய செய்திகளைக் கூறும் பகுதி யொன்று “ **உலாவியற்படலம்** ” என்னும் பெயருடன் அமைந்திருத்தல் இங்கே கருதற்குரியது. உலாச்சிறப்பையே தனியாக அமைத்துப் பாடிய உலாப் பிரபந்தங் களுள் மிகப் பழமையானது மேற்கூறிய “ திருக்கைலாய ஞான வுலா ” ஆகும். அதுமுதலில் இயற்றப்பட்டதாதலின் “ ஆதி

வுலா '' வெனவும் வழங்கப்பெறும். அவ்வுலாவைப் பின்பற்றித் தத்தமக்குத் தோற்றிய பலவகைக் கற்பனைகளை அமைத்துப் பிற்காலத்துப் பலகவிஞர்கள் உலாக்களை இயற்றினர்.

பாட்டுடைத் தலைவனாகிய இறைவன் கண்டாரைப் பிச்சேற்றும் தனது திவ்ய அகவியல்புகளை யெல்லாம் புறம்பே தோற்றுவிக்கும் திருமேனியழகுடன் அருளாட்சி புரிவான் நிலவுலகத்தே பவனி வருங்கால் அவனைக் கண்டு காமுறும் எழுவகைப்பருவ நங்கையரையும் 'கொண்டானையல்லா லறியாக்குல மகளிரை' மானும் உழுவலன்பினரது குடிப்பிறந்த எழுவகை ஞானநிலையினராகிய உத்தம மக்களாகக் கொள்ளும் விழுமிய முறையைத் தேர்ந்தெடுத்து ''தென்புதுவை மணிவண்ணன் உலா'' எனப் பெயரிய ஒரு உலாப் பிரபந்தத்தைப் பாடியுள்ளார் ஒருநல்லாசிரியர்.

''ஏழுபருவ மாதர்களில் பேதையை ஆன்மாவின் அபிலாஷை யென்றும், பெதும்பையைச் சிந்தையென்றும், மங்கையை அநுஸ்மிருதி யென்றும், மடந்தையை இச்சை யென்றும், அரிவையை ருசி யென்றும், தெரிவையைப் பரபக்தி யென்றும், பேரிளம் பெண்ணைப் பரம பக்தி யென்றும் கொள்வர்.''

தலங்களில் உள்ள மூர்த்திகளைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்ற தமிழ்ப் பிரபந்தங்கள் பிற்காலத்து மலிந்தன. அவ்வகையில் உலாக்களும் இயற்றப்பெற்றன.

இவ்உலாப் பிரபந்தங்களில் 'திருச்சின்னம்' என்றதோர் சிறு பகுதி காணப்பெறுகின்றது. உதாரணங்கள் பின்வருமாறு:—

119 ... ... —மகுடத்

120 தலையன் கொணரத் தருநாட்டி னும்பூ
வலையந் தனில்வந்தான் வந்தான்—கலியி

121 னுகத்துக் கரிய வொருமறையோ னம்பர்
மகத்துக்கு முன்வந்தான் வந்தான்—சகத்தோர்

122 தனையளவு காணுத தாளாற் பரவை
மனையளவு போய்வந்தான் வந்தான்—முனைவர்

123 தெரிசனசிங் காதனத்தே செம்பொற் றியாகம்
வரிசை தரவந்தான் வந்தான்—சிரமிழுந்த

124 மாய னுயிர்திருப்ப வந்தான்வந் தானெனமுன்
சேய திருச்சின்னஞ் சேவிப்ப—

—(திருவாரூருலா.)

68 கங்கையா தித்தீர்த்தக் கன்னியருஞ் சீர்கொள்ளெழு
மங்கையரும் வாம மருங்கிலுறத்—துங்கவிசை

69 பன்னுகின்ற தும்புருவு நாரதரும் பாடிவர
மன்னிமையோர் பூமா மழைசொரியப்—பொன்னி

திருச்சின்னம்.

70 நதிரிடைக்கோன் முன்னோர் நரைமுதியா ணீழல்
வதிகின்றோ மென்ன வந்தான் வந்தான்—விதியால்

71 சகத்தவர்விண் ணோர்சூடிச் சார்ந்து தக்கன் செய்த
மகத்தளவுஞ் சென்று வந்தான் வந்தான்—மிகத்துங்க

72 வன்மதில்சூழ் தஞ்சைக்கு வந்தான்வந்தா னெனவே
பொன்மருவு சின்னம் புகழ்ந்தார்ப்ப.— ... ...

—(தஞ்சைப்பெருவுடையாருலா.)

திருச்சின்னம்.

... ... —பங்கயப்பூந்

112 தாட்டுணையா ளங்கயற்கண் சார்கூட லான்வந்தான்
ஆட்டை விடாப் புலியூரான் வந்தான்—நாட்டிவைத்த

113 சண்மதத்து மேலான தந்திவனத் தான் வந்தான்
மண்பரவு புற்றிடத்தான் வந்தான்—உண்மையன்பன்

114 ஆவணத்து முற்றும்விலை யாமென்றவன் வந்தான்
பூவணத்து வாசப் பொருள் வந்தான்—மேவினர்தம்

115 துன்பக் கடல்கடத்துந் தோணிபுரத்தான் வந்தான்
இன்பவெள்ளத் தையாற்றிறை வந்தான்—நம்பும்

116 அருங்குமுத செவ்வா யறம் வளர்த்த தேவி
மருங்கமருங் காஞ்சிபுரன் வந்தான்—நெருங்குசடா

117 தாரண மாமுனிவோர் தந்தத் துதிக்கை பெற்ற
வாரண வாசியான் வந்தான்—பேரணியாய்ப்

118 பாணித் தணிந்த பணிப்பைக்கு ளடங்காத பெரு
மாணிக்க மாமலையான் வந்தான்—தானிறையத்
119 தேங்காய்வில் லானந்தத் தேனையன்பர்க் கூட்டிவைக்கும்
ஈங்கோய் மலையெம்பிரான் வந்தான்—தீங்கை
120 அடும்பரமன் காளத்தி யந்தாதி கொண்ட
கடம்பைச் சிவசங் கரனும்—நெடுங்கயிலைக்
121 குன்றுடையான் றொண்டர்குழா முடையான் வந்தானென்
றென்று திருச்சின்ன மெடுத்திசைப்ப—மன்றல்
122 இசைந்ததிருத் தேர்வீதிக் கேக வுடன்கூடி
வசந்தன் றிருத்தேர் மருவப்—பசும்பொன்னி
—(கடம்பர்கோயில்உலா.)

பவனி.

... ... —வோதக்
கடலேந் துலகமெலாங் காத்தபிரான் வந்தான்
200 வடவேங் கடத்தரசு வந்தான்—றொடர்கதியைக்
கைமாவி னுக்குமொரு காலமா வென்றருள்சே
201 வைமாத வப்பெருமான் வந்தான்—பைமா
வனந்த கருடா சலத்திருப்பான் வந்தான்
202 மனந்தனிலே வீற்றிருப்பான் வந்தா—னினைந்து
பொழிவிழியா னந்தப்புலவர்பிரான் வந்தான்
203 வழிபுழுகு மெய்யுடையான் வந்தா—னழகொழுகு
நீல மலைகுனிய நின்ற பெரு மான்வந்தான்
204 மாலை யணிந்திலகு மால்வந்தான்—வேலைப்
புடவிலய மாகாமற் பொன்னுதரந் தாங்க
205 வடலிலையி லேதுயின்றான் வந்தான்—கடல்கடந்த
சீராமன் வந்தான் சிவனே செபித்தாலும்
206 வாரா விருந்தான் வரவந்தா—னேரலர்மேன்
மங்கை மணவாளன் வந்தான்வந் தானென்று
207 பைங்கனகச் சின்னம் பணிமாறக்—
—(திருவேங்கடவுலா.)

திருச்சின்னம்.

156 கருத்தி னருத்தி யினைக் கண்டு மகிழ்ந்து
மருத்தின்மகன் ரேள்வந்தான் வந்தான்—திருத்திப்

157 பரவத்து நிர்ணயஞ்செய் பட்டர்பிரான் முன்னே
வரவயப் புள்ளில்வந்தான் வந்தான்—அரவ

158 உருவமரு வுங்கொடியோ னுருக்குத் தந்தை
மருகருக்காத் தூதுவந்தான் வந்தான்—உருகு

159 கடக்குஞ் சரங்கார்க்கக் கால்விசைத் தோடி
மடுக்கரைக்கு முன்வந்தான் வந்தான்—அடுக்கா

160 விதலையை யுற்ற வியன் மதலைக்காக
மிதிலை யதி லேவந்தான் வந்தான்—இதனின்

161 மனத்திற் கொடுமை கொண்ட மாதின் மொழியால்
வனத்தினிடை யேவந்தான் வந்தான்—சினத்திற்

162 ககனத்து வந்து கடுந்தவஞ்செய் மன்னன்
மகனுக்கு முன்வந்தான் வந்தான்—செகத்தோர்

163 புகழ்புட்பகத்தே பொருவி லொருதம்பி
மகிழ்வுற்றிட வந்தான் வந்தான்—மகிமை

164 மருவும் மணிவண்ணன் வந்தான் வந்தானென்
றெருவாது சின்னமுறைக்கத்—திருவீதி

—(தென் புதுவை மணிவண்ணனுலா.)

“ அன்பர்க்கே யவதரிக்குமாயன் நிற்க
அருமறைகள் தமிழ்செய்தான் தாளே கொண்டு
துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டும்
தொல்வழியே நல்வழிகள் துணிவார் கட்கே.”

—(தேசிகமாலை. அதிகாரச் சுருக்கு. 2.)

என உலகினர்க்கு அறிவுறுத்தியவர் நம் மறைமுடித் தேசிகனுர். அம்மதுரகவியாழ்வார் நம்மாழ்வாரைச் சென்றடைந்து தென்றமிழ்த் தொடையில் “கண்ணிநுண் சிறுத்தாம்பு” என்னும் திருப்பதிகம் ஒன்றே பாடினுர். “மன்றே புகழுந்திரு வழுந்தூர் வள்ளல்” (கம்பநாடர்) அதற்கு ஈடாக அப்பதிகம் பத்துள்ளதாக ஒரு நூற்றந்தாதியை அச்சடகோபர் விஷயமாகப் பாடினர். எனவே, மதுரகவிகளைப் பின்பற்றியவர் கம்பநாட்டாழ்வார் என்

பது வெளிப்படை. ஆகலின் இவர் காட்டிய வழியும் தொல்வழி யாம் நல்வழியாயிற்று. கம்பநாடர் பெரிய பெருமாள் விஷயமாக இராமாவதாரத்தை இயற்றியருளினர். நம் வேதாந்த தேசிகரோ மதுரகவிகள் விஷயமாக ''மதுரகவிஹ்ருதயம்'' எனும் ரஹஸ்ய மும், ஆழ்வாரந்தாதிக்குப் பதின் மடங்காக அம்மாறன் விஷயமாக ''ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்'' எனப் பெயரிய திருப்பாதுகமாமறை யும் பாடியுள்ளார்.

மஹாகவி பாலகாண்டம் முதல் உயுத்தகாண்டம் வரையுள்ள இராம கதையை ஆறு பாக்களில் அமைத்துள்ளதை நோக்கின் அவருக்கே ''கம்பன்'' என்ற திருநாமந்தகும் என்னத் தட்டில்லை. ஸ்ரீமத்ராமாயணத்தைச் ''சரணுகதி வேதம்'' எனத் தெளிவித்த வேதமுடித் தேசிகனும் இவ்வாறு பாசுரங்களையும் நன்கு அறிந்தவர் என்பதும் பெறலாம். அசுவமேதயாக சாலைக்குச் செல்லச் செழு மணித்திண்டேர் ஏறினன் ஸ்ரீராம பிரான்.

மங்கையர் வாழ்த்த மாகத ரேத்த
மறைய வராசிகள் கூறப்
பொங்கிய கடலிற் புடைபரந் திரைத்துப்
பொன்னகர்ச் சனம்புடை சுற்றப்
பங்கமல்வீரன் பங்கயக் கண்ணுற்
பார்த்தபார்த் திடமெலாஞ் சனங்கள்
செங்கரங் கூப்பத் தேவர்களுவப்ப
வேறினன் செழுமணித் திண்டேர்.

—(அசுவமேதயாகப்படலம். 72.)

அப்பொழுது திருச்சின்னங்கள் மாறி மாறி ஊதத்தலைப்பட்டன. எங்ஙனமெனின்,

கம்புவைத் தரித்த கையிற்
கார்முகந் தரித்தான் வந்தான்
அம்புயக் கண்ணன் வந்தான்
அன்பருக் கன்பன் வந்தான்
தம்பியர்க் கினியான் வந்தான்
தசரத ராமன் வந்தான்
உம்பருக் கமிழ்த முன்னாள்
உதவியவொருவன் வந்தான். (73)

மநுகுலம் விளங்கத் தோன்றி
வரிசிலை யிளையாளோடும்
முனியொடு போனான் வந்தான்
முப்புர மெரித்த வில்லி
தநுவினை யறுத்துச் சீதை
தனைக்கரம் பிடித்தான் வந்தான்
அனையவ ளுடனே மீண்டும்
அயோத்தியி லடைந்தான் வந்தான் (74)

தாயுரை தலைமேற் கொண்டு
தையலை யுடனே கொண்டு
தீயவெங் கானஞ் சேர்ந்த
செருவலி வில்லி வந்தான்
தூயமா முனிவன் முன்பு
தோன்றிய தூயோன் வந்தான்
மாயமா ரீசன் மாள
வரிசிலை வளைத்தோன் வந்தான். (75)

அநுமனை யடிமைகொண் டாங்
காயிரங் கதிரோன் மைந்தற்
கினியனாய் வாலி மாள
வெரிசரந் துரந்தோன் வந்தான்
நினைவதன் முன்ன மாழி
நீரெலா நெருப்பதாகக்
குனிசிலை வளைத்தான் வந்தான்
கோசலை நாடன் வந்தான். (76)

குன்றினா லாழி கட்டிக்
கொடுந்திறற் சேனை யோடு
சென்றிராக் கதரை யெல்லாஞ்
செருக்களத் தவிய நூறித்
தன்றிற லழிந்து நின்ற
தசமுகன் வலிமைகண் டங்
கின்றுபோய் நாளை வா
வென்றியம்பிய விறைவன் வந்தான். (77)

முன்னநாஞ் சொன்ன நாளின்
முடுகிநாஞ் செல்லோ மாயின்
வன்னியின் பரதன் வீழு
மென்றுதன் மனத்தி லெண்ணி
அன்னவ னெரிவி ழாமல்
அநுமனை முன்னே யேவிப்
பொன்னக ரடைந்தான் வந்தான்
புவனமூன் றுடையான் வந்தான். (78)

என்று கூறி,

என்றுசின் னங்க டம்மில்
இசைந் துடன் மாறியூதத்
தன்றுணை யிலாத வென்றித்
தசரத ராமன் தேர்மேல்
பொன்றிகழ் மாடவீதி
புகுந்தனன் ... ... (79)

என முற்றுவித்துள்ளார்.

மேற்குறித்த பாடல்களில் "வந்தான்" என்றபதம் முதற் பாட்டில் ஆறு முறையும், இரண்டு முதல் நான்கு வரையிலுள்ள பாக்களில் முறையே மூன்று முறையும், ஐந்தாரும் பாக்களில் ஒரு முறையும் காணப்பெறுகின்றது. "கம்பு" (சங்கு) என்று ஆதியிற் றெடங்கியுள்ளதையும் "கம்பன்" என்ற திருநாமத் தையும் ஆய்ந்து நோக்கி உண்மை தெளிக. அவ்வாறு பாசுரங் களும் திருச்சின்னம் பரிமாறியதை விளக்குகின்றது.

இது காறும் கூறியவற்றால் தேசிகனுர் திருவாய் மலர்ந் தருளிய "திருச்சின்னமாலை"க்கு மூலம் செந்தமிழில் உள்ள உலாப்பிரபந்தத்து வரும் "திருச்சின்னம்" என்ற பகுதியும், கம்பரது "பெருமாள் புறப்பாடும்" என்று நன்கு அறியலாம்.

முன்னேர் வழியை ஒரு நூதன முறையில் அமைத்து அழகு திகழச் செய்தார் தூப்புற்குலமணி. அச்சந்தமிகுதமிழ் மறை யோன் சூட்டிய "திருச்சின்னமாலை" யைத்தரித்து என்றும் இன்றெனத்திகழ்கின்ருள் தமிழணங்கு.

5. மாலையமைப்பு.

வேதாந்த வாசிரியன் யாத்த "திருச்சின்னமாலை" பதினொன்று பாசுரங்கள் கொண்டது. இறுதிப் பாசுரம் நீங்கலாக இதர பத்துப்பாசுரங்கள் எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தங் களாக வமைக்கப்பெற்று ஒவ்வொரு பாசுரத்திலும் "வந்தார்" எனும்பதம் எண் முறை வந்து, ஈற்றடியிறுதி "வந்தார்தாமே" என முற்றுவித்துள்ளது விசேடித்து அநுபவித்தற்குரியது. இறுதிப் பாசுரமும் அதே விருத்த வகையே. அதில்லையேல் இம் மாலைப் பொருள் எளிதில் அரியவியலாது.

6. மாலைப் பொருள்.

இத்திருச்சின்னமாலை என்ற சீரிய நற்பிரபந்தம், மன்னு திரு மந்திரத்தின், வாழ்துவயத்தின் பொருளும், துன்னு புகழ்க் கீதைதனிற் சொன்ன வெண்ணுன்கின் பொருளும், இன்னபடி என்று உரைக்கும் செய்ய தமிழ்மாலை.

இதில், முதலாறு பாசுரங்கள் திரு மந்திரார்த்தத்தை வெளி யிடுகின்றன. அவற்றுள், முதல் மூன்று பாட்டுக்கள் பிரண வார்த்தத்தைப் பிரதி பாதிக்கின்றன. அவற்றுள், முதல் இரண்டு பாசுரங்களால் பிரணவத்தில் உள்ள அகாரத்தின் அர்த்தம் கூறப் பெறுகின்றது. முதற் பாசுரத்தில், அனைத்தையும் படைத்தல் முதலிய தன்மைகளால் காரணத்வமும், நித்யஸூரிகளால் அநுப விக்கப்படுதல் முதலியவற்ருலும், இரண்டாம் பாசுரத்தில் வேதத்தைக் காத்தல் முதலியவற்ருலும் ரக்ஷகத்வமும் விளக்கப் பெற்றுள்ளன. மூன்ருவது பாசுரம் அகாரத்தின்மேல் ஏறி லோபித்துக்கிடக்கும் நான்காம் வேற்றுமையையும், உகாரமகாரங் களின் அர்த்தங்கள் இருக்கும்படியையும் விளக்கும். நான்கு முதல் ஆறுவரையுள்ள பாக்கள் நமச்சப்தத்தின் அர்த்தத்தையும், நாராயணசப்தார்த்தத்தையும், நாராயண சப்தத்தின் மீதுள்ள நான்காம் வேற்றுமையின் பொருளையும் கூறும். துவயப் பொருளை வெளிக்காட்டுவது ஏழாம் பாட்டு. சரம சுலோகக் கருத்தைச் சுருக்கிக் கூறுவது எட்டாம் பாட்டு. அச்சுலோகரத்தினத்தில் 'மாம், அஹம்' என்ற சொற்களால் தோற்றுகிற குணங்களை

அவனுடைய லீலைகளைக் கொண்டு நிரூபிப்பது ஒன்பதாம் பாட்டு. கீழ்க்கூறிய ரஹஸ்யார்த்தங்களை யெல்லாம் பேரருளாளன் விஷயத்திலே அநுபவித்து அர்ச்சாவதாரவைபவத்தைப் பரக்கப் பேசுகின்றது அடுத்த பத்தாம் பாட்டு. நிகமனப் பாசுரம் இம் மாலைச் சுருக்கத்தையும், சங்கதியையும், பேரருளாளன் பிரபாவ மான இந்நன்னூல் சிற்றின்பம் இசையாதார்க்கு இனிதாம் என்பதையும் நன்கு புலப்படுத்துகின்றது.

இம்மாலையில் எட்டாவது, ஒன்பதாவது பாசுரங்களில் உள்ள விசேஷார்த்தங்களின் சுருக்கம் தருவாமிங்கு.

எட்டாவது பாசுரம் :

'தருமன் விடத்தாந்தூது போனர்' என்றதால் பகவான் ஆச்ரிதபரதந்த்ரர் என்பதும், அவருக்கு அடியாரிடம் உள்ள அபாரகருணையும், பாரத யுத்தப்ரவர்த்தனமும், 'தரணி பொருத் திண்பாரம் தவிர்த்தார்' என்றதால் அவதாரப்ரயோஜனமும், பூபாரவதரணத்திலேக்ருதஸங்கல் பராயிருத்தலும், 'அருமறை யின் பொருளனைத்தும் விரித்தார்' என்றதால் கீதையில் வேதார்த் தங்கள் அனைத்தும் அடங்கியுள்ளமையும், பகவான் கீதோப நிஷதாசாரியனாய்த் திகழ்ந்தமையும் கூறப்பெற்றன. 'அஞ்சின நீயென்னயடை' என்பது 'ஸர்வதர்மாந்பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ' என்ற பாகத்தின் விளக்கம். 'தரும மெலாந்தாமாகி நிற்பார்' என்பது 'ஏக' சப்த தாத்பர்யம். 'தாமே நம் வினையனைத்துந்தவிர்ப்பார்' என்னுமது 'ஸர்வ பாபேப்யோமோக்ஷயிஷ்யாமி' என்ற தொடருக்கும், 'நீ புலம் பேல்' என்பது 'மாசுச:' என்ற பாகத்திற்கும் விரிவாம். 'பார்த் தனுக்குத் தேரூர்ந்தார்' என்றதால் ஸ்வாச்ரிதர்க்கு ஐஹிகாமுஷ் மிகரக்ஷணம் பண்ணுதல் கூறினதாயிற்று.

ஒன்பதாவது பாசுரம் :—'வஞ்சனை செய்பூதனையை மாய்த் தார்' என்பதில் அனைத்தையும் அறியுந்தன்மையும், 'மல்லர்மத கரிமாளமலைந்தார்' என்பதில் அனைத்தையும் ஆற்றும் அபார சக்தியும், 'கஞ்சனைப் போர்க்கடுஞ் சினத்தாற் கடிந்தார்' என் பதில், துஷ்டசிக்ஷணம் ப்ரதி பாதிதமாகையாலே பக்தர்களின் விரோதியை ஒழிப்பதில் உள்ள அசாதாரண ஆர்வமும், 'கண் ணுதன் முன்வாணன் தோள்கடிந்தார்' என்பதில் பாணாஸுர னலே உபாஸிதனாய் அவனுக்கு வரப்ரதாநம் பண்ணி, தத்ரக்ஷ ணார்த்தமாக ஸபரிகரனாய் வந்து ஸந்நத்தனானருத்ரனுடைய

முன்பேயவனுடைய புஜங்களைச் சேதித்தவர் என்றபடியால் ஸ்வஸங்கல்பஸ்ய பாலலோசனப்ரப்ருதி ரபிதுரிவாரபலோபதா நமும் (தடையற்ற செய்கையும்), 'வெஞ்சொல்தரவீடு கொடுத்து கந்தார்' என்பதில் ஸர்வாபராதங்களையும் க்ஷமித்தலும், 'விலக் கில்லாவழி நடத்த விரைந்தார்' என்பதில், மோக்ஷமளிப்பதில் உள்ள விரைவும், 'பஞ்சவரைப் பலவகையுங்காத்தார்' என்பதில் அடியார்களைப் பல படிகளாற்காத்தலும், 'பாஞ்சாலிகுழல் முடித் தார்' என்பதில் சரணுகதிக்குப் பலன் தருகை ஆகிய பகவத் குணங்கள் நன்கு வெளியாகின்றன.

ரஹஸ்யத்ரய ஸாரார்த்தத்தை விரிவாகவும், சுருக்கமாகவும் பல பிரபந்தங்களில் தனக்குவமையில்லாத சாகாந்த தேசிகன் அருளிச் செய்வர்.

"மூன்றி லொருமூன்று மூவிரண்டு முந்நான்குந்
தோன்றத் தொலையுந்துயர்."

—(ரஹஸ்யபதவீ. தேசிகமாலை, அமிருதரஞ்சனி 4.)

என்ற குறட்பா ஒன்றே இதற்குத்தக்க சான்று பகரும்.

7. திருநாமங்கள்.

ஏகாந்த மூன்று மெழிலா லுரைசெய்து
மாகாந்தஞ் செய்தருளும் வள்ளலாய்—சாகாந்த
தேசிகனுர் தூப்புற் றிருவேங்க டேசகுரு
வாசகமே யெங்களுக்கு வாழ்வு.

[திருமந்திரம், துவயம், சரமசுலோகம் என்ற மூன்று ரஹஸ் யங்களையும் அழகோடு பேருரை வகுத்து பெருமையுள்ள காந்தம் என்னும் உலோகத்தைப்போல் பிறர் மனத்தைக் கவர்ந்து அவர் உஜ்ஜீவிக்குமாறு அருள் புரிகின்ற வள்ளலாகி வேதாந்த தேசி கன் என்று பிரசித்தி பெற்ற தூப்புல்திருவேங்கட முடையானுடைய அருளிச் செயல்களே எங்களை உஜ்ஜீவிக்கச் செய்யும்.]

என்றபடி, மூன்று ரஹஸ்யங்களின் பொருள் விளக்கும் திருச்சின்னமாலை யமைப்பில் 'இவ்வாறுள்ளவர், இன்ன குணம் செயல் உள்ளவர் வந்தார்' என்று ஒவ்வோரடியிலும் வந்துள் ளதை நோக்க, ஒவ்வொரு தொடரும் ஆதியம் பகவானுகிய திரு மாலது ஒரு "திருநாமம்" ஆக அமைந்துள்ளதைக் காண்க

லாம். அத்திருநாமங்களை அங்குள்ள அடைவிலே தருகின்றேன். இங்கு பேரறிஞர் ஆராய்ந்தருள்க.

(1) ஈர் உலகைப் படைக்க எண்ணி யிருந்தார்.
(2) எழில் மலரோன் தன்னை அன்றே ஈன்றார்.
(3) மாருதி மண் நீர் ஆகும் மாயோர்.
(4) வானொடு எரி ஆகும் மறை யோர்.
(5) சூரியர் தம் முடன் துலங்கு தூயோர்.
(6) சுரர்களுக்கு அன்று அமுது அருள் சுந்தரனார்.
(7) வாரிதி சூழ் வையகம் வாழ் வித்தார்.
(8) வண்மையுடன் வரம் தருவார்.
(9) அருமறையை ஊழிதனில் காத்தார்.
(10) அது தன்னை அன்று அயனுக்கு அளித்தார்.
(11) தரும வழி அழியாமல் காப்பார்.
(12) தாமரையா ளுடன் இலங்கும் தாதை.
(13) திருவுரையாய்த் தாம் பொருளாய் நிற்பார்.
(14) திரு அருளால் செழும் கலைகள் தந்தார்.
(15) மருவலர்க்கு மயக்கு உரைக்கும் மாயோர்.
(16) வான் ஏற வழி தந்தார்.
(17) அனைத்து உலகும் காக்கும் அருளாளர்.
(18) அனைத்துக்கும் அதிபதியாய் நிற்பார்.
(19) தினைத்தனையும் திருமகளை விடாதார்.
(20) தேசு ஒத்தார் மிக்காரும் இல்லார்.
(21) நினைக்க நமக்கு இன் அறிவு தந்தார்.
(22) நிலை நின்ற உயிர் தோன்ற நினைந்தார்.
(23) எனக்கு இவர் நான் இவர்க்கு என்ன இனியார்.
(24) எழுத்து ஒன்றில் திகழ நின்றார்.
(25) நாம் வணங்கத் தாம் இணங்கா நிற்பார்.
(26) நம்மை அடைக்கலம் கொள்ளும் நாதர்.
(27) நாம் எமக்கு ஆம் வழக்கு எல்லாம் அறுத்தார்.
(28) நமக்கு இது என்று உரையாமல் வைத்தார்.
(29) சேமம் எண்ணி எம்மை அன்பர்க்கு அடைத்தார்.
(30) செழும் தகவால் திண்சரணும் ஈசர்.
(31) தீவினையை அனைத்தும் தாம் தவிர்ப்பார்.
(32) எமைத் தமக்கே யாய்க் கொள்வார்.
(33) உலகு எல்லாம் உள்ளே வைத்து உமிழ் ந்தார்.

(34) உலகு உடம்பாய்த் தாம் உயிராய் நின்ருர்.
(35) அலை கடலாய் ஆனந்தம் அடைந்தார்.
(36) அளவு இல்லா அருள் ஆழிப் பெருமாள்.
(37) திலகம் எனும் திருமேனிச் செல்வர்.
(38) செழும் குணங்கள் இரு மூன்றும் உடையார்.
(39) இலகு சுடர் முழுநலம் ஆம் இனியார்.
(40) எல்லார்க்கும் கதி ஆனுர்.
(41) அருளாலே விலங்குஇரண்டும் அழிப்பார்.
(42) அம்சிறையைக் கழித்துஅருளும் அன்பர்.
(43) மருள்வாரா நம்மைக் காப்பார்.
(44) வான்ஏற வழிநடத்தி வைப்பார்.
(45) தெருள்ஆரும் தெளிவிசும்பு தருவார்.
(46) திண்கழற்கீழ் வாழ்ச்சிநமக்கு அருள்வார்.
(47) பொருளான அடிமைநமைக் கொள்வார்.
(48) பிரியாமல் காத்து அளிப்பார்.
(49) அகலகிலாத் திருமகளார் அன்பர்.
(50) அடிஇரண்டும் ஆருகத் தருவார்.
(51) புகல்இல்லார் புகல்ஆகும் புனிதர்.
(52) பொன்உலகில் திருவுடனே திகழ்வார்.
(53) அகிலம்எலாம் ஆனந்தம் ஆனுர்.
(54) அடியிணைக்கீழ் வைத்து அடிமை கொள்வார்.
(55) பகல்நடுவு இரவுஅழைக்க வல்லார்.
(56) பகல்ஒன்ருய் இரவு அழித்தார்.
(57) தருமன்விடத் தாம்தூது போனுர்.
(58) தரணிபொருத் திண்பாரம் தவிர்த்தார்.
(59) அருமறையின் பொருள்அனைத்தும் விரித்தார்.
(60) அஞ்சினநீ என்னைஅடை என்ருர்.
(61) தருமம்எலாம் தாம்ஆகி நிற்பார்.
(62) நம்வினை அனைத்தும் தாமேதவிர்ப்பார்.
(63) பரம்எனது நீபுலம்பேல் என்ருர்.
(64) பார்த்தனுக்குத் தேரூர்ந்தார்.
(65) வஞ்சனைசெய் பூதனையை மாய்த்தார்.
(66) மல்லர்மத கரிமாள மலைந்தார்.
(67) கஞ்சனைக் கடும்சினத்தால் போர்கடிந்தார்.
(68) கண்நுதல்முன் வாணன்தோள் கழித்தார்.

(69) வெம்சொல்தர வீடுகொடுத்து உகந்தார்.
(70) விலக்குஇல்லா வழிநடத்த விரைந்தார்.
(71) பஞ்சவரைப் பலவகையும் காத்தார்.
(72) பாஞ்சாலி குழல்முடித்தார்.
(73) அத்திகிரி அருளாளப் பெருமாள்.
(74) ஆனைபரி தேரின்மேல் அழகர்.
(75) கச்சிதனில் கண்கொடுக்கும் பெருமாள்.
(76) கருதவரந் தரும்தெய்வப் பெருமாள்.
(77) முத்திமழை பொழியும்முகில் வண்ணர்.
(78) மூலமென ஓலம்இட வல்லார்.
(79) உத்தரவே திக்குள்ளே உதித்தார்.
(80) உம்பர்தொழும் கழல் உடையார்.

8. மெய்விரத மான்மியத் 'திருச்சின்னம்'

"ஸ்ரீ ஹஸ்திகிரி மாஹாத்ம்யம்" என்று ஒரு ரஹஸ்யம் ஸ்ரீ வேதாந்த தேசிகனால் மணிப்பவளநடையில் அருளிச் செய்யப் பெற்றுள்ளது. அதனை "மெய்விரத நன்னிலத்து மேன்மை" (29) என்று அதன் இறுதிப்பாசுரம் கூறும். ஸத்யவ்ரதம் என்னும் சிறந்த க்ஷேத்ரத்தின் பெருமை என்பது அத்தொடரின் பொருள். மெய்விரதம்—ஸத்யவ்ரதம். இத்திருப்பதி காஞ்சீபுரம், ஹஸ்திகிரி, பெருமாள்கோயில் எனவும் வழங்கப்பெறும். இந்தப் புண்ணியதலத்தில் அநுஷ்டிக்கப்படும் வ்ரதங்கள் முதலிய புண்ய கர்மங்களுக்கு உடனேபலன் கிடைப்பது நிச்சயமாதலின் 'மெய் விரதம்' எனப்பெயர் வந்தது என்பர்.

இந்தரஹஸ்யத் தொடக்கம் பின்வருமாறு :—

"ஸகலலோக ஹிததம விஷய விவித வேதாந்தோப ப்ரஹ்மணங்களான புராணங்களில் முக்யதம மாகையாலே முற்பட எண்ணப்பட்ட ப்ரஹ்மாண்ட புராணத்தில் ஸத்யவ்ரத க்ஷேத்ர மாஹாத்ம்ய முகத்தாலே ஸந்தர்சிதமான பேரருளாளன் பெருமையை பாவுகரான பகவந்நிஷ்டருடைய ஹ்ருதயரஞ்சநார்த்தமாக மநஸ்ஸிலே பாவமும், வாக்கிலே ராகமும், கரத்திலே தாளமுமாக பாவ ராக தாளங்களை வகுத்த பரத சாஸ்த்ரத்தின்படியே பண்ணும் இசையும் திகழப் பார்க்கின்றோம். இத்தைக் குறிக்கொண்டு கேட்டருள்வீர்மின்."

[ஸகலலோக - எல்லாவுலகங்களுக்கும் ; ஹிததமவிஷய - உயர்ந்த நன்மையைப்பற்றிக் கூறுகிற ; விவித - அநேகவிதங் களான ; வேநாந்த - வேதாந்தங்களின் அர்த்தங்களை ; உபப்ரஹ் மணங்களான - விசதமாக நிரூபிக்கிற ; ஸந்தர்சிதமான - காட்டப் பெற்ற ; பாவுகர் - ரஸிகர் ; பகவந்நிஷ்டர் - பாகவதர் ; ஹ்ருதய ரஞ்சநார்த்தம் - மனத்தில் சந்தோஷம் உண்டாவதற்காக ; வகுத்த- விரிவாக நிரூபிக்கப்பெற்றிருக்கிற ; பரத சாஸ்திரம் - பரதமுனி யால் இயற்றப்பெற்றது ; பண்ணும் - கானமும் ; இசையும் - ஷட்ஜாதிஸ்வரங்களும் ; திகழ - பிரகாசிக்கும்படி ; குறிக்கொண்டு- ஸாவதானமாக.]

இந்தமாஹாத்ம்ய மத்தியில்,

'' இப்படி வேகவதியாய் வந்த ஸரஸ்வதியினுடைய வேகம் அடங்கும்படி வெஃகாவில் துயிலமர்ந்த வேந்தன் கடாக்ஷிக்கக் கலக்கமற்றுவந்த ஸரஸ்வதியையும் கூட்டிக்கொண்டு ப்ரஹ்மா அச்வமேதயாகத்தை நடத்த வபாஹோமம் ப்ரவ்ருத்தமானவள விலே ஆயிரம்கோடி ஆதித்யர்கள் உதித்தாப்போலே உத்தரவேதி மத்யத்திலே ஒரு மஹாதேஜஸ்ஸு தோன்றிற்று.''

[வெஃகா - திருவெஃகா என்னும் க்ஷேத்திரம் ; துயில் அமர்ந்த வேந்தன் - அறிதுயிலமர்ந்த ராஜாவாகிய ஸர்வேச்வரன் ; கலக்கமற்று - பிரணயகோபம்நீங்கி.]

'' இப்படி பெருமாள் ஆவிர்பவித்தருளினபடிக்கு நித்யஸூரி கள் முகத்தாலே காளங்கள் வலம்புரி கலந்தெங்கும் ஆர்த்தன.''

[ஆவிர்பவித்தருளினபடிக்கு -அத்தோற்றத்தின் ஏற்றத்திற்குத் தகுந்தபடி ; நித்யஸூரிகள் முகத்தாலே - நித்யஸூரிகளுடைய வாயினால் ஊதப்பெற்ற; எங்கும் - எல்லாத்திக்குக்களிலும்; கலந்து - வியாபித்து ; ஆர்த்தன - சப்தித்தன.]

பெருமையுடை யத்திகிரிப் பெருமாள் வந்தார்
பேராத வருள் பொழியும் பெருமாள் வந்தார்
அருமறையி னுச்சி தனில் நின்ருர் வந்தார்
அங்கமுட னவையாகும் பெரியோர் வந்தார்
திருவுரையாய்த் தாம் பொருளாய் நிற்பார் வந்தார்
திருவருளால் செழும் கலைகள் தந்தார் வந்தார்
மருவிலர்க்கு மயக்குரைக்கும் மாயோன் வந்தார்
வானேற வழிதந்தார் வந்தார் தாமே.

அத்திகிரி யருளாளப் பெருமாள் வந்தார்
ஆனைபரி தேரின்மே லழகர் வந்தார்
கச்சிதனில் கண்கொடுக்கும் பெருமாள் வந்தார்
கருதவரம் தரும்தெய்வப் பெருமாள் வந்தார்
முத்திமழை பொழியும்முகில் வண்ணர் வந்தார்
மூலமென ஓலமிட வல்லார் வந்தார்
உத்தரவே திக்குள்ளே உதித்தார் வந்தார்
உம்பர் தொழும் கழலுடையார் வந்தார் தாமே ''

என மறைமுடித் தேசிகனர்

உயர்விருத வருளாளப் பெருமாள் தேசின்
திறத்தில் திருச்சின்னமாலை

பாடியிருப்பது நோக்கத்தக்கது.

இங்குக் காட்டிய இரண்டு பாசுரங்களில் முதற் பாசுரத்திலுள்ள பின்னிரண்டடிகள் '' திருச்சின்ன மாலை '' யில் உள்ள இரண்டாவது பாசுரத்தின் பின்னிரண்டடிகளே. '' அத்திகிரியருளாளப் பெருமாள் வந்தார் '' என்ற இரண்டாம் பாசுரம் '' திருச்சின்ன மாலை '' யின் பத்தாவது பாசுரமாக அங்ஙனே மிளிர்கின்றது.

அத்திகிரி அருளாளப் பெருமாள் உத்தரவேதிக்குள்ளே உதித்தவுடன் திருச்சின்னம் பரிமாறியதை வெகு கம்பீரமாக நன்கு உணர்த்துகின்றன இப்பாக்கள்.

9. முன்னோர் மொழி பொன்னே போல் போற்றும் பெற்றி.

'' மங்கையர் கோன் என்றிவர்கள் மகிழ்ந்துபாடுஞ்
செய்யதமிழ் மாலைகள்நாம் தெளிய வோதித்
தெளியாத மறைநிலங்கள் தெளிகின் றோமே.''

என அருளியவர் நம் வேதாந்தகுரு. இவ்வாசாரியசிகாமணி ஆரியமுஞ் செந்தமிழும் ஆய்ந்த பொதுத் தேசிகனே. இவர் பேசுபய வேதாந்த தேசிகன். இவர் தாம் அருளிச் செய்த பிரபந்தங்களில் தமது அநுபவ பரீவாஹமேலீட்டால் அபிநவதசாவதாரர்களான ஆழ்வார்கள் அருளிச் செயல்களை அமைத்துள்ள பெற்றி

அளவிடற்கரியது. தேசிகமாலை என்பது திவ்யப்ரபந்த ஸாரார்த்த தீபிகை என்னலாம். "திருச்சின்னமாலை" யில் முன்னோர் மொழி பொன்னே போல் போற்றியுள்ள பெற்றி காண்பாம்.

ஈருலகைப் படைக்க வெண்ணி யிருந்தார்
எழில் மலரோன் றன்னை யன்றே யீன்றார் (1)

என்பதை

தேவும் எப்பொருளும் படைக்க
பூவில் நான்முகனைப் படைத்த
தேவன் எம்பெருமானுக் கல்லால்
பூவும் பூசனையும் தகுமே ?

—(திருவாய்மொழி 2–2–4)

திருவுருவு கிடந்தவாறும் கொப்பூழ்ச்
செந்தாமரை மலர்மேல் திசைமுகன்
கருவுள் வீற்றிருந்து
படைத்திட்ட கருமங்களும்

—(திருவாய்மொழி 5-10-8)

என்பனவற்றோடு ஒப்பிடலாம்.

நீராய் நிலனாய்த் தீயாய்க்
காலாய் நெடுவானாய்
சீரார் சுடர்க ளிரண்டாய்ச்
சிவனாய் அய னானாய் !

—(திருவாய்மொழி 6-9-1)

தீயாய் நீராய் நிலனாய்
விசும்பாய்க் காலாய்
நீயாய் நீநின்ற வாறு
இவை யென்ன நியாயங்களே !

—(திருவாய்மொழி 7-8-1)

என்பனவற்றை

மாருதமண் ணீராகு மாயோர்
வானோ டெரிதாமாகு மறையோர் (2)

என்பவற்றிற்கு மூலமென்னலாம்.

அயர்வறு மமரர்கள் அதிபதி

—(திருவாய்மொழி 1-1-1)

என்பதன் வியாக்கியானமாக

சூரியர்தம் முடன்துலங்கு தூயோர் (1)

எனவமைத்தார் போலும்.

தூயானைத் தூய மறையானை

—(பெரிய திருமொழி 11-7-3)

என்பது கலியனொலிமாலை.

பொங்கு நீள்முடி அமரர்கள் தொழுதெழ
அமுதினைக் கொடுத்து அளிப்பான்

—(பெரிய திருமொழி 5-3-6)

என்ற மங்கையர் கோன் பாடல்

சுரர்களு க்கன்றமுதருள் சுந்தரனர் (1)

என வேற்றுருவுடன் பொலிந்து நிற்கின்றது.

அமரர்க்கு அமுதீந்த ஆயர்கொழுந்து

—(திருவாய்மொழி 1-7-9)

என்பதும் அநுஸந்தேயம்.

வசையில் நான்மறை கெடுத்த
அம்மலரயற்கு அருளிமுன் பரிமுகமாய்
இசைகொள் வேதநூலென் றிவை பயந்தவனே!

—(பெரிய திருமொழி 5-3-2)

என்ற வேல்வலவன் பாசுரத்தையும்

அதுதன்னை அன்றுஅயனுக்கு அளித்தார் (2)

என்ற அடிகளையும் நோக்குக.

எனக்கே யாட்செய் எக்காலத்தும் என்றுஎன்
மனக்கே வந்து இடை வீடின்றி மன்னி
தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே
எனக்கே கண்ணனை யான்கொள் சிறப்பே.

—(திருவாய்மொழி 2-9-4)

என்ற வண்குருகூர்ச் சடகோபன் திருவாய் மலர்ந்தருளிய பாசுரத்தின் மூன்றுவதடியை

தமக்கேயா யெமைக் கொள்வார் (4)

எனப்பொன்னே போல் போற்றியுள்ளார் தூப்புற்றுாயோன்.

உண்டும் உமிழ்ந்தும் கடந்தும்
இடந்தும் கிடந்தும் நின்றும்
கொண்ட கோலத் தொடு
வீற்றிருந்தும் மணங் கூடியும்
கண்ட வாற்றால் தனதே
யுலகென நின்றான் தன்னை
வண்தமிழ் நூற்க நோற்றேன்
அடியார்க்கு இன்ப மாரியே.

—(திருவாய்மொழி 4-5-10)

ஆதியாகி அகலிடம் படைத்து
உண்டுமிழ்ந்து கடந்திடந் திட்ட
சோதி நீள்முடி யாய்!
தொண்ட னேன்மது சூதனனே!

—(திருவாய்மொழி 7-1-3)

ஞாலமுற்றும் உண்டுமிழ்ந்த
நாத னென்றும் ... ...

—(பெரிய திருமொழி 4-8-6)

கஞ்சனைக் கொன்று அன்று
உலகமுண் டுமிழ்ந்த கற்பகத்தை

—(பெரிய திருமொழி 5-6-6)

என்ற ஆழ்வார்கள் அருளிச் செயல்களின் ஸங்க்ரஹமே

உலகெல்லா முள்ளேவைத் துமிழ்ந்தார் (5)

என்ற வேதாந்த வாசிரியரின் வாய் மொழியாக மலர்ந்த தென்னலாம்.

திடவிசும் பெரி வளி நீர்நிலம் இவை மிசை
படர் பொருள் முழுவது மாய் அவை யவை தொறும்
உடல் மிசை யுயி ரெனக்கரந்து எங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவை யுண்ட சுரனே.

—(திருவாய்மொழி 1–1–7)

உம்முயிர் வீடுடையான்

—(திருவாய் மொழி 1–2–1)

என்ற குருகைநாதன் வாய் மொழிகளின் ஸாரார்த்தமே

உலகுடம் பாய்த் தாமுயிராய் நின்றூர் (5)

என்று விளங்குகின்ற தென்க.

உயர் வற வுயர் நலம் உடையவன்

—(திருவாய்மொழி 1–1–1)

என்றதன் கருத்து

அலை கடலா யானந்த மடைந்தார் (5)

எனப்படுகின்றது.

பிணக்கற அறு வகைச் சமயமும்
நெறியுள்ளி யுரைத்த
கணக்கறு நலத்தனன்
அந்தமி லாதியம் பகவன்

—(திருவாய்மொழி 1–3–5)

என்பதை

செழுங்குணங்கள் இருமூன்றும் உடையார் (5)

என ஷாட்குண்யபரி பூர்ணராய் (ஜ்ஞானசக்தி பலைச்வர்ய வீர்ய தேஜஸ்ஸு) நிரூபிதஸ்வரூப விசேஷணங்களையும் ஸ்வரூபநிரூப கந்தர் கதமானவ மலத்வத்தையும் கூறுகின்றூர்.

இனனுணர் முழுநலம்

—(திருவாய்மொழி 1–1–2)

ஒளிவரு முழுநலம்

—(திருவாய்மொழி 1–3–2)

என்பனவற்றின் வியாக்கி யானமாக

இலகு சுடர் முழுநலமா மினியார் (5)

என்கின்றூர் வேதாந்தகுரு.

திருமெய் யுறைகின்ற செங்கண் மால் நாளும்
இருமை வினைகடிந்து இங்கு என்னை யாள்கின்றூனே.

—(திருவாய்மொழி 10–4–2)

... ... இன்று
தானே தடுமாற்ற வினைகள் தவிர்த்தான்
தேனேய் பொழில் சூழ் திருப்பேர் நகரானே.

—(திருவாய்மொழி 10–8–5)

என்ற ஆழ்வார் பாசுரங்களையும்

தாமனைத்துந் தீவினையைத் தவிர்ப்பார் (4)

என்பதனோடு ஒப்பிடுக.

அருள் பெறுவார் அடியார் தம் அடியனேற்கு ஆழியான்
அருள்தருவான் அமைகின்றான் அதுநமது விதிவகையே
—(திருவாய் மொழி 10–6–1)

மண்கொள் ஞாலத்து உயிர்க் கெல்லாம்
அருள் செய்யும் வானவ ரீசனை
—(திருவாய்மொழி 3–6–11)

என்ற பரசுரங்களின் கருத்து

அளவில்லா வருளாழிப் பெருமாள் (5)

என்பதிற்றிகழ்கின்றது.

அருளாலே விலங்கிரண்டு மழிப்பார் (6)
அஞ்சிறையைக் களித்தருளு மன்பர் (6)

என்பனவும் அதைச் சார்ந்ததே.

வானேற வழிதந்த வாட்டாற்றான்
—(திருவாய்மொழி 10–6–5)

என்றதே

வானேற வழிநடத்தி வைப்பார் (16)

என விரிந்தது போலும்

விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான்
—(திருவாய்மொழி 10-6-3)

தெளிதாகிய சேண்விசும்பு தருவானே.
—(திருவாய்மொழி 10-8-4)

... ... நீ அவர்க்கு
வைகுந்த மென்றருளும் வான்.
—(பெரிய திருவந்தாதி 53)

என்ற ஆழ்வார்களின் அருளிச் செயல்களே

தெருளாருந் தெளிவிசும்பு தருவார் (6)

என புத்துருக் கொண்டு நிற்கிறது.

அகலகில்லேன் இறையு மென்று
அலர்மேல் மங்கை யுறைமார்பா!
—(திருவாய்மொழி 6-10-10)

கோலமலர்ப் பாவைக்கன் பாகிய என் அன்பே யோ!

—(திருவாய்மொழி 10-10-7)

என்ற ஆழ்வார் செய்யதமிழ் மாலைகள்

அகலகில்லாத் திருமகளா ரன்பர் (7)

தினைத்தனையுந் திருமகளை விடாதார் (2)

என்ற தேசிகனுர் மொழிகளாக மிளிர்ந்தன.

ஆறெனக்கு நின்பாதமே சரணுகத் தந்தொழிந்தாய்

—(திருவாய்மோழி 5-7-10)

என்ற குருகூர்ச் சடகோபன் சொல்லொடு

அடியிரண்டி மாருகத் தந்தார் (7)

என்பது ஒப்பு நோக்கத் தகும்.

அடிக்கீழமர்ந்து புகுந்து அடியீர்!
வாழ்மின் என்றருள் கொடுக்கும்

—(திருவாய்மொழி 6-10-11)

அருளா தொழிவாய்
அருள்செய்து அடியேனைப்
பொருளாக்கி உன்பொன்
னடிக்கீழ்ப் புகவைப்பாய்

—(திருவாய்மொழி 9-8-8)

சன்ம சன்மாந்தரம் காத்து
அடியார்களைக் கொண்டு போய்
தன்மை பெறுத்தி த்தன்
தாளிணைக்கீழ்க் கொள்ளும் அப்பனை

—(திருவாய்மொழி 3-7-7)

என்ற சடகோபன் வாய்மொழிகள்

திண்கழற்கீழ் வாழநமக் கருள்வார் (6)

என்ற தேசிகனுர் திருவாக்காக மலர்ந்தது என்னலாம்.

பாழியால் மிக்க பார்த்தனுக் கருளிப்
பகலவ ஞெளிகெட பகலே
ஆழியால் அன்றங்கு ஆழியை மறைத்தான்
அரங்கமா நகரமர்ந்தானே.

—(பெரிய திருமொழி 5-7-8)

என்ற மானவேற் கலியன் வாயொலிகள்

பகல்நடுவே யிரவழைக்க வல்லார் (7)

என்ற மறைமுடி ஆசிரியன் வாக்காக ஒலிக்கின்றன.

வல்வினை தீர்க்கும் கண்ணனை

—(திருவாய்மொழி 4-4-11)

தீராவினைகள் தீரஎன்னை யாண்டாய்!

—(திருவாய்மொழி 5-8-10)

என்ற ஆழ்வார் பாசுரங்களையும்

தாமேநம் வினையனைத்துந் தவிர்ப்பார் (8)

என்பதனோடு ஒப்பு நோக்கத்தகும்.

கஞ்சன்விட்ட வெஞ்சினத்த
களிறடர்த்த காளையென்றும்
வஞ்சமேவி வந்தபேயின்
உயிரையுண்ட மாயனென்றும்

—(பெரிய திருமொழி 4-8-2)

பேய்மகள், துஞ்சநஞ்சு
சுவைத்துண்ட தோன்றலை
... ...
கஞ்சனைத் துஞ்சவஞ்சித்த வஞ்சனை

—(பெரிய திருமொழி 7-10-8)

என்ற கலியன் உரை செய்தவற்றையும்,

வஞ்சனைசெய் பூதனையை மாய்த்தார் (9)
கஞ்சனைப் போர்க் கடுஞ்சினத்தாற் கடிந்தார் (9)

என்பனவற்றையும் ஒப்பிடலாம்.

வாணபுரம் புக்கு முக்கட் பிரானைத்
தொலைய வெம் போர்கள் செய்து
வாணனை ஆயிரம் தோள்துணித்தான்

—(திருவாய்மொழி 7–10–7)

என்ற ஆழ்வார் பாசுரத்தை

கண்ணுதல்முன் வாணன்தோள் கழித்தார் (9)

என்பது அடியொற்றியுளதென்னலாம்.

அன்று ஐவர்க்கு அருள்செய்த நெடியோன்

—(திருவாய்மொழி 3–7–11)

என்ற ஆழ்வார் பாசுரமும்

பஞ்சவரைப் பலவகையுங் காத்தார் (9)

என்றதும் ஒருபடித்தே.

கன்னலே ! அமுதே ! கார்முகில் வண்ணனே !

—(திருவாய்மொழி 7–1–2)

என்பர் நம்மாழ்வார்.

முத்திமழைபொழியு முகில் வண்ணர் (10)

என விளக்கியுள்ளார் தூப்புற்குலவிளக்கு.

இதுகாறும் கூறியவாற்றால் ஆழ்வார்கள் திருவாய் மலர்ந்தருளிய தேனை உண்டுகளித்து பிறர் உய்யுமாறு பிரபந்தம் அருளி அத்தேனைச் சேமித்து வைத்தவரே நம் தூப்புற்குலமணி என்பது தெற்றென விளங்கும்.

10. பன்மணித் தொகுதி.

திருச்சின்னமாலை யாகிய இவ்வரிய பிரபந்தத்தில் அநேக மணிகள் உள்ளன. அவற்றிற் சிலவற்றைத் தொகுத்துரைப்பாம்.

பெரிய பிராட்டியாரையும் அத்திருமங்கையின் கேள்வனை திருமாலையும் சேர்த்து அநுபவிப்பது இனிது மகிழ்தற்குரியது.

தாமரை யாளுடனிலங்குந் தாதை (2)
திருவுரையாய்த்தாம் பொருளாய் நிற்பார் (2)
தினைத்தனையுந் திருமகளை விடாதார் (3)
அகலகில்லாத் திருமகளாரன்பர் (7)
பொன்னுலகில் திருவுடனே திகழ்வார் (7)

என்பன காண்க.

அருள்வரதனே " காக்குங் கடவுள் " என்பதை,

அருமறையை யூழிதனிற் காத்தார் (2)
தருமவழி யழியாமற் காப்பார் (2)
அனைத்துலகுங் காக்கும் அருளாளர் (3)
மருள் வாராவகை நம்மைக் காப்பார் (6)

பிரியாமற் காத்தளிப்பார் (6)
பஞ்சவரைப் பலவகையுங்காத்தார் (9)

என்பனவற்றிற் காண்கலாம்.

அத்திகிரித் திருமாலின் அருண்மையை வெளிப்படுத்தும் பகுதிகளாவன :—

சுரர்களுக் கன்றமுதருள் சுந்தரனுர் (1)
வாரிதிசூழ் வையகம் வாழ்வித்தார் (1)
அதுதன்னை யன்றயனுக் களித்தார் (2)
திருவருளாற் செழுங்கலைகள் தந்தார் (2)
சேம மெண்ணியெம்மையன்பர்க் கடைத்தார் (4)
செழுந்தகவால் திண்சரணுமீசர் (4)
அளவில்லா வருளாழிப் பெருமாள் (5)
அருளாலே விலங்கிரண்டு மழிப்பார் (6)
திண்கழற்கீழ் வாழ்ச்சி நமக்கருள்வார் (6)
பிரியாமற் காத்தளிப்பார் (6)
அத்திகிரி யருளாளப் பெருமாள் (10)
உயர்விருத வருளாளப் பெருமாள் (11)

அவரது அஸாதாரணமான வண்மையை

வண்மையுடன் வரந்தருவார் (1)
வானேற வழிதந்தார் (2)
கருதவரந்தருந் தெய்வப்பெருமாள் (10)

என்பனவற்றில் விளக்குகின்ருர் தூப்புல்வித்தகர்.

அவர் '' மாயோன் '' என்பது,

மாருத மண்ணீராகு மாயோன் (1)
மருவலர்க்கு மயக்குரைக்கு மாயோன் (2)

என்பனவற்ருல் அறியலாம்.

பேரருளாளனே '' சர்வலோக நாயகன் '' என்பதை

அனைத்துக்கு மதிபதியாய் நிற்பார் (3)
நம்மை யடைக்கலங் கொள்ளுநாதர் (4)
நாம் வணங்கத்தாம் வணங்கா நிற்பார் (4)
செழுந்தகவால் திண்சரணுமீசர் (4)

என்பன காட்டுகின்றன.

அவரே ஆதியம்பகவன் என்பதும், ஸர்வசக்தன் என்பதும், சரணுகதவத்ஸலன் என்பதும்

மூலமென வோலமிட வல்லார் வந்தார் (10)

என்பதிற் காண்கலாம்.

செழுங் குணங்களிரு மூன்றுமுடையார் (5)

என்பது அவன் பகவச்சப்தவாச்யன் எனக் குறிக்கின்றது.

அவரது வடிவழகு

சுந்தரனுர் (1)
தேசொத்தார் மிக்காருமிலாதார் (3)
திலகமெனுந் திருமேனிச் செல்வர் (5)
முத்திமழை பொழியு முகில்வண்ணர் (10)

என்பனவற்றிற் பொலிந்து திகழ்கின்றது.

அருளாளப் பெருமாள் ''இனியார்'' என்பதை,

எனக்கிவர் நானிவர்க் கென்னவினியார் (3)
இலகுசுடர் முழுநலமாமினியார் (5)

என்று விளக்குகிருர் விசுவாமித்திரகுலவிப்பிரர்.

அவன் ''முத்திதரும் அண்ணல்'' என்பது

வானேற வழிதந்தார் (2)
வீடு கொடுத்துகந்தார் (9)
முத்தி மழை பொழியு முகில் (10)

என்பனவற்றிற் கொண்டாடப்பெறுகின்றது.

அவரே ''கண்ணனுய்த்திருவவதரித்தவர்'' என்பது பின் வரும் அடிகளால் வெளிப்படை.

பகல் நடுவேயிர வழைக்க வல்லார் (7)
தருமன் விடத்தாந்தூது போனுர் (8)
தரணி பொறுத்திண் பாரந்தவிர்த்தார் (8)
அருமறையின் பொருளனைத்தும் விரித்தார் (8)
அஞ்சின நீ யென்னையடை யென்ருர் (8)
தரும மெலாந்தாமாகி நிற்பார் (8)
தாமே நம் வினையனைத்துந்தவிர்ப்பார் (8)
பரமெனது நீ புலம் பேல் என்ருர் (8)
பார்த்தனுக்குத் தேரூர்ந்தார் (8)
வஞ்சனைசெய் பூதனையை மாய்த்தார் (9)

மல்லர் மதகரி மாள மலைந்தார் (9)
கஞ்சனைப்போர் கடுஞ்சினத்தாற் கடிந்தார் (9)
கண்ணுதன்முன் வாணன்றோள் கழித்தார் (9)
வெஞ்சொல்தர வீடு கொடுத்து கந்தார் (9)
பஞ்சவரைப் பலவகையுங் காத்தார் (9)
பாஞ்சாலி குழல் முடித்தார் (9)

அவரே '' நான்முகற் பயந்த நாரணன் '' என்பதை

எழில் மலரோன்றன்னை யன்றேயீன்றார் (1)
அது தன்னை யன்ற யனுக்களித்தார் (2)

என்பனவற்றிற் காட்டுகின்றார்.

11. எதிராசரைப் போற்றியுள்ளமை.

தேசிக மாலைத் தொடக்கத்தில்
முத்திக்கருள்சூட் மூன்றைத்தெளி
—(அமிருதரஞ்சனி. (3)

என்றும்,

இறுதியில்,
முத்திதரு மெதிராசர் —(பிரபந்தசாரம் (16)

என்றும் அமைந்திருப்பதும்,

மத்தியிலுள்ள திருச்சின்னமாலையில் பொலிந்து விளங்கும்
முத்தி மழை பொழியுமுகில் (10)

என்பது எதிகட்கிறைவரான பெரும்பூதூர் வந்த வள்ளலைக் குறிப்பதாகக் கருதுவது இழுக்காகாது. சான்றோர் ஆராய்க.

12. பரிமேலழகர்.

திருக்குறட்குச் சீரிய உரையிட்ட பரிமேலழகர் ஸ்ரீ காஞ்சிமா நகரத்திலுள்ள ஸ்ரீ உலகளந்த பெருமாள் கோயில் அருச்சக பரம்பரையிற் பிறந்தவர் ; வைணவ சமயத்தினர். இவற்றை,

திருக்காஞ்சிவாழ் பரிமேலழகன்
வள்ளுவர் நூற்கு வழி காட்டினன் தொண்டைமண்டலமே.
—(தொண். சதக).

நீணிலங்கடந்தோன் தாள்தொழு மரபிற்
பரிமேலழகன் உரிமையினுணர்ந்தே.

—(பரிபாடற் பாயிரம்).

என்ற முன்னோர்கள் கூற்றுக்கள் ஆதரிப்பனவாம். இவர் திருமாலினிடத்தும் திருமாலின் அடியார்களிடத்தும் மெய்யன்பு பூண்டொழுகியவர். வடநூற்றுறையும் தென்றிசைத் தமிழும் விதி முறை பயின்ற நெறியறி புலவர் இவர். மிக அரியனவாகிய வட நூல்களின் கருத்துக்களை எளியனவாகத் தமிழ் மக்கள் அறியுமாறு செய்த மகோபகாரிகளில் இவர் ஒருவர். சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல் முதலிய அழகுகளை யமைத்து உரை யெழுதுதல் இவருக்கு இயல்பு. "ஈசனதருளால் உய்த்துணர்வுடையவோர் உண்மையாளன்" என ஆன்றோர் புகழும் பெற்றியையுடைய உரையாளர் இவர்.

பரிமேலழகியன் என்பது, குதிரை நம்பிரான் மேல் அலங்காரத் திருக்கோலங்கொண்டருளியவர் என்ற பொருளதாய்க் கச்சி அருளாளப் பெருமாளைக் குறிப்பதாம். சித்திரா பௌர்ணிமை முதலிய திருவிழாக் காலங்களில் அப்பெருமான் பரிமேலழகியாராகவும் ஆனைமேலழகியாராகவும் காட்சி தருந் திருக்கோலம் இன்றும் தரிசிக்கத்தக்கது.

அத்திகிரி அருளாளப் பெருமாள் வந்தார்.
ஆனைபரி தேரின்மே லழகர் வந்தார் (10)

என இத்திருச்சின்னமாலையில் வந்துள்ளமை காண்க.

ஆனைமேலழகர், பரிமேலழகர், தேரின் மேலழகர் என்ற திருநாமங்களின் இடையிலுள்ளதான தோரழகு மோரழகே.

பதினொன்றும் நூற்றுண்டுக்கும் பதினன்காம் நூற்றுண்டுத் தொடக்கத்துக்கும் இடைப்பட்ட காலமொன்றே பரிமேலழகர்க்கு உரியது என்பது சாஸந ஆராய்ச்சியாளர் கருத்து.

உரையாசிரியரிற்றலை சிறந்த பரிமேலழகியாரைப் போற்று முகத்தான் மறைமுடித் தேசிகனர் திருச்சின்னமாலையில் குறித் துள்ளார் எனப் பேரறிஞர் கூறுப. சந்தமிகு தமிழ் மறையோனின் அற்புதத்தை யாரே அறியகில்லார்?

13. அழகிய அமைப்பு.

இம்மாலையில் உள்ள சில பதத் தொகுதி வெகு அழகாக அமைந்துள்ளது. அதுவும் ஆக்கியோனின் கவித்திறனே.

எழில் மலரோன்	(1)
துலங்கு தூயோர்	(1)
அருளாழிப் பெருமாள்	(5)
திலகமெனுந்திருமேனி	(5)
சுடர் முழுநலம்	(5)
அருளுமன்பர்	(6)
வழி நடத்தி வைப்பார்	(6)
மாளமலைந்தார்	(9)
ஆனைபரி தேரின் மேலழகர்	(10)
முத்தி மழை பொழியுமுகில்	(10)
உம்பர் தொழுங் கழலுடையார்	(10)

என்பன காண்க.

மோனை யழகு செவிக்கினிதாய்த் திகழ்கின்றது.

வண்மையுடன் வரந்தருவார் வந்தார்தாமே	(1)
அது தன்னையன் றயனுக்களித்தார்	(2)
மருவலர்க்கு மயக்குரைக்கு மாயோர்	(2)
வானேற வழிதந்தார் வந்தார்	(2)
உலகெல்லா முள்ளே வைத் துமிழ்ந்தார்	(5)
அலைகடலா யானந்த மடைந்தார்	(5)
அஞ்சி றையைக்கழித்தருளு மன்பர்	(6)
புகலில்லார் புகலாகும் புனிதர்	(7)
அகில மெலா மானந்த மாறுர்	(7)
புகலில்லார் புகலாகும்	(7)
மூலமென வோலமிட வல்லார்	(10)

என்பன வற்றில் அநுப்ராசங்காண்க.

எம்பெருமானைச் சொன்னவிடமெல்லாம் பிராட்டியையும் சொல்லும். ஸர்வசரீரியே திருமகளார் தனிக்கேள்வன். எவ்வாறு விஷ்ணு எங்கும் உளனோ அவ்வாறே திருவும் எங்கு முளள். பரத்வத்துக்குத் தாம்பத்யம் உயிர். இந்து தன் நிலவுடன் இலங்கும் தன்மை போல் அவன் திருதனக்கு அவனே திருவாகித்

திருவுடன் ஒன்றியே நாராயணனும், நாராயணனேடொன்றியே திருவும் விளங்குதலின் பரதத்துவம் ஒன்றே.

"அர்த்தோ விஷ்ணுரியம் வாணீ" என்று ஸ்ரீ பராசரபகவான் அருளிச் செய்கிருர்.

"புல்லிய சொல்லும் பொருளும் போலவும்" என்பது பரிபாடலில் காணப்பெறும் உவமம், 'சொல்லும். பொருளும் போற் பரந்து' (இராமா. பால. ஆற்று 19) என்று த்வநியில் வைத்துக் குறிப்பிடுவர் கம்ப நாடர்.

பூமகளும் பொருளும் மெனநீயென்
மாமகள் தன்னெடு மன்னுதி

—(இராமா. பால. கடிமண 87.)

[பொருள் – பரம் பொருளாகிய திருமால்; பூமகள்—திருமாமகள்.]

என விளக்குதலும் காண்க.

இவற்றையெல்லாம் சால விளக்குவான் வேண்டி இத் திருச்சின்னமாலேயில்

திருவுரையாய்த் தாம் பொருளாய் நிற்பார் (2) என்று அழகுற வமைத்துள்ளார் தூப்புல் மாபுருடன். இவரது உவமை நலம் அனேவரது உள்ளத்தையுங் கொள்ளே கொள்ள வல்லதே.

14. பின்புள்ளோர் போற்றியவாறு.

ஆரியமெனும் சாகரத்தையும், பாகத மெனும் பவ்வத்தையும், தமிழெனும் ஆழியையும் உலகளந்த திரிவிக்கிரமனே யொப்பவே ஒக்கக் கடந்து பேரருள் பூத்த பெருந்தகைப் பெருமானுராகிய சீரார் தூப்புல் திருவேங்கட நாத னெனும் இரு மாமறை புரந்த பேராசிரியர் மும்மறைப் பொருள் விளங்கப் பாடி யருளிய "திருச்சின்னமாலே" யைப் பின்பற்றி பிற்காலக்கவிகள் பாடி யுள்ளார்கள், அவற்றுள் சில காட்டுகின்றேன்.

சதுமறையு மறியொணு வொருவன்வந் தான்முத்தி
தரவல்ல தலேவன் வந்தான்
சகலாண்ட நாதன்வந்தானடியர் செய்தபிழை
சற்றுமிதயத்தி லெண்ணு

முதல்வன்வந்தா னித்யவிபவன் வந்தா னென்றுன்
முன்னூது விருதுசின்னம்
முச்சகமு மெச்சுமிதை மற்றுமுள தெய்வங்கள்
முன்னூதில் வெட்குவார் காண்
மதுரகவி பணிமாறன் வண்பொய்கை பேய்பூதன்
மழிசைமன் குலசேகரன்
மங்கைநா தன்கோதை புதுவைவரு முனிபாணன்
மண்டங் குடிக்கதிபனும்
ததியர்துதி செயவோது கவிமாலை புனையெங்கள்
சாமியே கச்சியோனே
சயதேவ ராசனே லோசனும் போசனே
சதகோடி ரவிதேசனே.

—(பேரருளாளன் பஞ்சரத்தினம்.)

பரிச்சின்ன மான விருநா
லெழுத்தின்பல் வண்மையெலாம்
விரிச்சு நலம்பெற வோதவல்
லோர்க் கிந்த மேதினிக்கே
மரிச்சின்ன மீளப் பிறவாமல்
வாழ்விக்கு மால்வரதர்
திருச்சின்ன வோசை யினிமையுண்
டோமற்றைத் தேவருக்கே.

—(திருச்சின்னமாலைச் சிறப்புத்தனியன்.)

[அளவுபட்ட திருவெட் டெழுத்தான திருமந்திரத்தின் பல்வகைப் பலனையும் அளிக்கவல்ல தன்மை முழுதையும் தாம் நன்மையை அடையும் பொருட்டு விளக்கி அநுஸந்தாநம் செய்யும் பாகவதோத்தமர்களை இந்தத்தரணியிலே இறந்து பின்னும் பிறக்காமல் உஜ்ஜீவிக்கச் செய்பவரும் பக்தர்களிடம் விசேடஅன்பு உடையவருமான பேரருளாளருடைய திருச்சின்னத்தின் சப்தத்தின் இனிமை மற்றைத் தேவர்பாற் பெறமுடியுமோ ?]

என்ற பாசுரம் இவண் அநுஸந்தேயம்.

மால்வரதர், திருச்சின்ன வோசை
யினிமை யுண்டோ மற்றைத் தேவர்கட்கே

என்றதன் வியாக்கியானமாக

முதல்வன்வந்தா னித்யவிபவன் வந்தான் என்றுஉன்
முன்னூது விருதுசின்னம்
முச்சகமு மெச்சுமிதை மற்றுமுள தெய்வங்கள்
முன்னூதில் வெட்குவார் காண்

எனவமைத்துப் பாடிய பெற்றியே பெற்றி.

முத்திதர வல்ல தலேவன் வந்தான்
சகலாண்ட நாதன் வந்தான்

என்பன

முத்திமழை பொழியுமுகில் வண்ணர் வந்தார்
உம்பர்தொழுங் கழலுடையார் வந்தார் தாமே

என்பவற்றின் கருத்தையுட்கொண்டு வந்தனவே.

கண்ணனெழிற் கமலபதக் காதல் வந்தார்
கிரிசையறி வுடனினேவு வந்தார் வந்தார்
கண்ணிதுவென் றெண்ணுமறை காப்பார் வந்தார்
கண்ணனருள் பொதியுமதி வண்ணர் வந்தார்
பண்ணமரும் பழமறைகள் பூத்தார் வந்தார்
பாடியமே நாடியநாப் பகவர் வந்தார்
கண்ணனடி நண்ணுநலம் தந்தார் வந்தார்
கண்ணனெனக் கண்கொடுப்பார் வந்தார் தாமே.

—(தேசிகமாலே - கீதைச்சுருக்கு - 7.
வகுளமாலே தொகுதி 3 பகுதி 1, 2. பக்கம். 2)

இவற்ருல் வேதாந்த குருவின் வாசகத்தைத் தமிழ்கூறு நல்லுலகு பொன்னேபோல் போற்றியுள்ளமை தேற்றம்.

15. முற்றுரை.

திருச்சின்னமாலேயில் உள்ள நிகமனப்பாசுரம் இம்மாலேச் சுருக்கத்தையும், சங்கதியையும், பேரருளாளன் பிரபாவமான இந்நன்னூல் சிற்றின்பம் இசையாதார்க்கு இனிதாம் என்பதை யும் புலப்படுத்துகின்றது. இப்பாசுரம் தூப்புல் வள்ளலார் தமிழ்த் திறனே நன்கு காட்டலின் இங்கே தரப்பெறுகின்றது.

மறைத்தலேயி லிசையெழுத்தில் வணங்கும் வாக்கில்
மந்திரத்தி ஞலெழுத்தாந் திருநா மத்தில்

நிறைத்திலகு வேற்றுமையி லிரண்டா மொன்றி
நெடுமாறன் கீதையெல்லா நிறைந்த சொல்லில்
உறைத்தவர்கண் டுரைத்தபொரு ளான தெல்லா
முயர்விருத வருளாளப் பெருமா டேசின்
திறத்திலிவை திருச்சின்ன மாலை பத்தும்
செவிக்கினிதாம் சிற்றின்ப மிசையா தார்க்கே. (11)

[வேதங்களின் முதலிலும் முடிவிலும் அமைந்த எழுத்தாகிய பிரணவத்திலும் வணக்கத்தைக்கூறும் சொல்லாகிய நமச்சப்தத்திலும், மூலமந்திரத்தில் உள்ள நான்கு அக்ஷரங்கள் அமைந்த நாராயண சப்தத்திலும், அந்த நாராயண சப்தத்தைப் பூர்த்தி செய்து பிரகாசிக்கின்ற நான்காம் வேற்றுமையிலும், இரண்டு பாகமாயிருந்து ஒரு மந்திரமாயுள்ள துவயத்திலும், எம்பெருமானுடைய ஸ்ரீஸூக்தியாகிய ஸ்ரீ பகவத் கீதையில் உள்ள எல்லாப் பொருளும் தன்னுள் அடங்கப் பெற்ற சுலோகரத்தினத்திலும் நன்கு பரிசயம் செய்த ஆசார்யர்கள் தாங்கள் உள்ளபடி அறிந்து நமக்கும் உணர்ந்தவாறு உபதேசித்த அர்த்தங்கள் அனைத்தையும் சரணாகத ரக்ஷணம் என்னும் உயர்ந்த விரதத்தைக் கொண்டுள்ள பேரருளாளப் பெருமாளுடைய பெருமையின் விஷயத்திலே இயைத்து உரைக்கின்ற திருச்சின்ன மாலையாகிய பத்துப் பாசுரங்களும் அற்பமான ஸம்ஸார ஸுகத்தை விரும்பி அங்கீகரிக்காதவர்களுக்கு செவிக்கு மதுரமாயிருக்கும். இப்பிரபந்தம் பேரின்பமான பகவதநுபவத்தில் கருத்துடையோர்க்கே ரஸிப்பதாகும் என்றபடி.]

இதனால், பேரின்ப மிசைந்தவர் செவிக்கினிய செஞ்சொன் மாலை இத் " திருச்சின்ன மாலை " என்பது தேற்றம்.

இத்தேசிகமாலையின் தனிப்பிரபந்தமாகிய இவ்வழகிய மாலையைப் பெரியோர்பாற் கேட்டபடி " திருச்சின்னமாலைத்தேவர் " (இந்து நேசன். புஸ்தகம் 38. இலக்கம் 31. 5-8-39) என்ற கட்டுரை மூலமாகவும், " திருச்சின்னமாலை " (செந்தமிழ். முப்பத்தேழாந் தொகுதி — 1939-40. பக்கங்கள் 493-495) என்ற வியாஸ மூலமாகவும் விளக்கியுள்ளேன். மொழிவார் மொழிவனமும் மறையாகும் திருவயிந்தை மாநகரில் " ஸ்ரீ அஹீந்திரபுர ஹிதைஷி ஸபையின் " ஆதரவில் 28-9-41-ஆந்தேதி ஸ்ரீ தேசிகன் திருமாளிகையில் ஸ்ரீ தேசிக பக்த சிகாமணி, ரத்நதீபம் வண்பாக்கம் வேங்கடம் ஸ்ரீநிவாஸ வள்ளலாரின் அவைத்

தலைமையில் " திருச்சின்னமாலை " எனும் விஷயம் பற்றி உபந்யாஸம் செய்யும் பேறு பெற்றேன். அன்று தான், நம் ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரனால் கட்டப் பெற்று இன்று காறும் நன்கு பரிபாலிக்கப் பெற்றுவரும் திருக்கிணற்றருகில் அனைத்துலகும் என்றுங் கண்டு களிக்குமாறு " வெற்றிமேடு " பல மங்களவாத்ய கோஷங்களோடு நாட்டப்பெற்றது. " ஆயிந்தை மாநகரில் அமர்ந்தனை யெமக்காய் " என்று நாம் கொண்டாட விளங்கிவரும் தூப்புலண்ணல் அருள் சூடியுய்ந்தனன்றோ அது.

இதுகாறும் கூறியவாற்றால் " திருச்சின்னமாலை " என்ற பிரபந்தம் ஒப்பற்றதென்றும், அது அவசியம் ஓதியுணர வேண்டுவதொன்றென்றும், பேரின்பமடைய விரும்பும் மக்கள் அநவரதம் பாராயணம் பண்ணுதற்கேற்ற தென்றும், அதனை இயற்றியருளிய தேசிகனார் தூப்புல் திருவேங்கடேசகுரு என்றும், அக்குரு வாசகமே நமக்கு வாழ்வு என்றும் முக்குற்றமற முழுதுணரலாம்.

கல்விக்கடலான கம்பர்,

" மேவரும் உணர்வு முடிவிலாமையினால் வேதம் "

என்று வேதத்துக்கு இலக்கணம் வகுத்தார். இசையாலும் சொல்லாலும், பொருளாலும், தேர் பொருளாலும், த்வனியாலும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள விஷயங்கள் இவ்வளவுதான் என்று அறுதியிட்டுக்காட்ட முடியாததான சொற் செறிவுக்கு " வேதம் " என்று பெயரிட்டார். இதைக் கட்டளையாகக் கொண்டு அறுத்தமைத்த கற்களே தூப்புல்மாகுருவின் பாசுரங்கள் எனின் அது சாலப் பொருத்தமுடைத்தே. இந்த நினைவோடு இவரது பாடல் ஒவ்வொன்றையும் ஆராய்ந்தால் கல்லக் கல்லக் கவிப் பெருக்கூறும் ஊற்றாகவே ஒவ்வொரு பாசுரமும் அமைந்துள்ளது நன்கு தேறலாம். வேதசிரத்தேசிகனார் யாத்த இத் " திருச்சின்னமாலை " யும் ஓர் வேதமே.

தேசிகமாலையில் இது ஒன்பதாவது திருப்பதிகம். இது திருமந்திரம், துவயம், சரமசுலோகம் என்ற மூன்று இரகசியங்களின் (மும்மறையின்) பொருளையும் இன்னபடி என்று காட்டுகின்றது. " திருமந்திரச் சுருக்கு " (10) ; " துவயச்சுருக்கு " (12) ; " சரமசுலோகச் சுருக்கு " (11) என்றும் தனிப் பிரபந்தங்கள் உள்ளன. அவற்றின் ஆழ் பொருள்களை அடக்கிக்கொண்டு மிளிர்வதும் இம்மாலையே. இரகாசியார்த்த கர்ப்ப மானபேரரு

ளாளன் உத்ஸவாதிகளில் முழங்கப் பெறும் திருச்சின்ன ஒசையைச் செவ்விதின் கேட்டுணர்ந்த தூப்புலிறை அவ்வாத்ய விசேஷத்துக்குப் பாமாலை சாத்தி மகிழ்ந்ததை ஒருவாறு எடுத்தியம் பினம். சான்றோர் அருள் புரிவாராக.

தூப்புல் மாபுருடனின் தூமொழிகள் நாடெங்கும் நன்கு பரவி இவ்வுலகு விண்ணுலகாகுமாறு வேண்டுவன புரிதலே நல்லறிஞர் கடமையாகும். நல்லன்பர் இதனை நிறைவேற்றி வைப்பாராக.

வாழ்க உலகெலாம்.
வாழ்க சந்தமிகுதமிழ் மறையோன்.
வளர்க திருச்சின்னமாலை.
வாழ்க அன்பரீட்டம்.

சொல்வதுமுன் னுமந் தொழுவதுமுன் பாத
நல்குவது முன்னுடைய நற்குணமே—தொல்லருளுக்
கெம்மை யிலக்காக்கி யீனமா மெம்பரிசு
செம்மைசெய் தேசிகனே யின்று.

—(தேசிகர் நூற்றந்தாதி 95)

பொங்கும் மங்கலம் எங்குந் தங்குக.

16. திருச்சின்னமாலை.

[மூலமும் குறிப்புரையும்]

ஈருலகைப் படைக்கவெண்ணி யிருந்தார் வந்தா
ரெழின்மலரோன் றன்னையன்றே யீன்றார் வந்தார்
மாருதமண் ணீராகு மாயோர் வந்தார்
வானெடெரி தாமாகு மறையோர் வந்தார்
சூரியர்தம் முடன்றுலங்கு தூயோர் வந்தார்
சுரர்களுக்கன் றமுதருள்சுந் தரனர் வந்தார்
வாரிதிசூழ் வையகம்வாழ் வித்தார் வந்தார்
வண்மையுடன் வரந்தருவார் வந்தார் தாமே. (1)

[ஈர்உலகை - சேதநம், அசேதநம் என்னும் இருவிதமான பிரபஞ்சத்தை ; படைக்க - சிருட்டிக்க ; எழில் - அழகிய ; மலரோன் - பிரமன் ; மாருதம் - வாயு ; மாயோர் - ஆச்சரிய குணசேஷ்டிதங்களையுடையவர் ; வான் - ஆகாசம் ; எரி - அக்நி ; மறையோர் -

வேதத்தால் போற்றப்பெறுபவர் ; சூரியர் - நித்ய சூரிகள் ; துலங்கு வார் - விளங்குபவர் ; சுரர் - தேவர் ; அன்று - திருப்பாற்கடல் கடைந்த அக்காலத்தில் ; சுந்தரனார் - அழகர் ; வாரிதி - கடல் ; வையகம் - உலகம் ; வண்மை - கொடை ; தருவார் - கொடுத்தருளு வார்.]

அருமறையை யூழிதனிற் காத்தார் வந்தா
ரதுதன்னை யன்றயனுக் களித்தார் வந்தார்
தருமவழி யழியாமற் காப்பார் வந்தார்
தாமரையா ளுடனிலங்குந் தாதை வந்தார்
திருவுரையாய்த் தாம்பொருளாய் நிற்பார் வந்தார்
திருவருளாற் செழுங்கலைக டந்தார் வந்தார்
மருவலர்க்கு மயக்குரைக்கு மாயோர் வந்தார்
வானேற வழிதந்தார் வந்தார் தாமே. (2)

[அருமறை - அறியவரிய வேதங்கள் ; ஊழி - பிரளயகாலம் ; அது - அந்த வேதத்தை ; அயனுக்கு - பிரமனுக்கு ; அளித்தார் - கிருபையாலே உபதேசித்தவர் ; தருமவழி - அறநெறி ; தாமரை யாள் - பெரிய பிராட்டியார் ; தாதை - உலகுக்குத் தந்தை ; திரு - இலக்குமி ; உரை - வாக்கு ; பொருள் - அர்த்தம் ; செழும் கலைகள் - மேன்மேலும் தழைக்கின்ற வித்யைகள் ; மருவலர்க்கு - தம்மை அடையாதார்க்கு ; மயக்கு - மோஹந சாஸ்த்ரங்கள் ; வான் - பரமபதம் ; வழிதந்தார் - உபாயங்களை உபதேசித்தவர்.]

அனைத்துலகுங் காக்குமரு ளாளர் வந்தா
ரனைத்துக்கு மதிபதியாய் நிற்பார் வந்தார்
தினைத்தனையுந் திருமகளை விடாதார் வந்தார்
தேசொத்தார் மிக்காரு மில்லார் வந்தார்
நினைக்கநமக் கின்னறிவு தந்தார் வந்தார்
நிலைநின்ற வுயிர்தோன்ற நினைந்தார் வந்தா
ரெனக்கிவர்நா னிவர்க்கென்ன வினியார் வந்தா
ரெழுத்தொன்றிற் றிகழநின்றார் வந்தார் தாமே. (3)

[அனைத்து உலகும் - உலகம் யாவையும் ; அருளாளர் - பேரருளாளர் ; அனைத்துக்கும் - எல்லாவஸ்துக்களுக்கும் ; அதி பதி - சுவாமி ; தேசு - தேஜஸ்ஸு ; இன் அறிவு - ஆநந்த ரூபமானஜ்ஞாநம் ; நிலைநின்ற - நித்யனான ; உயிர் - ஜீவன் ; தோன்ற - தன்னையறியவேறு ஜ்ஞாநம் வேண்டாத படிதானே

பிரகாசிக்கும்படி ; எனக்கு இவர் - எனக்கு இவர் சுவாமி; நான் இவர்க்கு - நான் இவருக்கு அடியன் ; என்ன - என்று சொல்ல ; இனியார் - போக்யமாய்த் தோன்றுமவர் ; ஒன்று எழுத்தில் - ஓர் அக்ஷரமான பிரணவத்தில் ; திகழ நின்றார் - போற்றப் பெற்றுப் பிரகாசிப்பவர்.]

நாம்வணங்கத் தாமிணங்கா நிற்பார் வந்தார்
நம்மையடைக் கலங்கொள்ளு நாதர் வந்தார்
நாமெமக்காம் வழக்கெல்லா மறுத்தார் வந்தார்
நமக்கிதுவென் றுரையாமல் வைத்தார் வந்தார்
சேமமெண்ணி யெம்மையன்பர்க் கடைத்தார் வந்தார்
செழுந்தகவாற் றிண்சரணு மீசர் வந்தார்
தாமனைத்துந் தீவினையைத் தவிர்ப்பார் வந்தார்
தமக்கேயா யெமைக்கொள்வார் வந்தார் தாமே. (4)

[வணங்க - ஸேவிக்க ; இணங்கா நிற்பார் - பலனளிக்க உடன் பட்டு நிற்பவர் ; நாதர் - ரக்ஷகர் ; வழக்கு - விவாதங்கள் ; சேமம் - க்ஷேமம் ; அன்பர்க்கு - பாகவதர்கட்கு ; அடைத்தார் - அடிமையாக்கியவர் ; செழும் தகவால் - மிக்க கிருபையால் ; ஈசர் - ஸர்வேசுவரன் ; வினை - கர்மங்கள் ; தவிர்ப்பார் - ஒழிப்பவர் ; கொள்வார் - அங்கீகரிக்குமவர்.]

உலகெல்லா முள்ளேவைத் துமிழ்ந்தார் வந்தா
ருலகுடம்பாய்த் தாமுயிராய் நின்றார்வந்தா
ரலைகடலா யானந்த மடைந்தார் வந்தா
ரளவில்லா வருளாழிப் பெருமாள் வந்தார்
திலகமெனுந் திருமேனிச் செல்வர் வந்தார்
செழுங்குணங்க ளிருமூன்று முடையார் வந்தா
ரிலகுசுடர் முழுநலமா மினியார் வந்தா
ரெல்லார்க்குங் கதியானார் வந்தார் தாமே. (5)

[உள்ளே - பிரளய காலத்தில் தம் வயிற்றினுள் ; உமிழ்ந்தார் - சிருட்டி காலத்தில் மறுபடி படைத்தவர் ; உயிராய் - அந்தர்யாமியாய் ; அலைகடலாய் - குமிழி, நுரை, அலைமுதலிய பல நிலைமையில் மாறுகின்ற அலை நிறைந்த கடலைப்போலிருந்து ; திருமேனி - திவ்யமங்கள விக்ரஹம் ; இரு மூன்று குணங்கள் - ஜ்ஞாநம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜஸ் என்ற ஆறுகுணங்கள் : அல்லது, காக்குந்தன்மை, அருள், ஜ்ஞாநம்,

எளிமை, இந்திரியங்களின் அடக்கம், மனத்தின் அடக்கம் என்பன ; இலகு - மாறுபடாமல் பிரகாசிக்கின்ற ; சுடர் - ஜ்ஞாந ஸ்வரூபரும் ; முழுநலம் - பரிபூர்ணுநந்தஸ்வரூபருமாக ஆகின்ற ; கதி - அநுபவிக்கப் பெறும் பலனுயிருப்பவர்.]

அருளாலே விலங்கிரண்டு மழிப்பார் வந்தா
ரஞ்சிறையைக் கழித்தருளு மன்பர் வந்தார்
மருள்வாரா வகைநம்மைக் காப்பார் வந்தார்
வானேற வழிநடத்தி வைப்பார் வந்தார்
தெருளாருந் தெளிவிசும்பு தருவார் வந்தார்
திண்கழற்கீழ் வாழநமக் கருள்வார் வந்தார்
பெருவானி லடிமைநம்மைக் கொள்வார் வந்தார்
பிரியாமற் காத்தளிப்பார் வந்தார் தாமே. (6)

[விலங்கு - விலங்கு போன்ற புண்ய பாபங்களாகிய கர்மங்கள் ; அம்சிறை - ஸம்ஸாரிகளுக்குக்கர்மவசத்தால் அழகிய தாய்த் தோன்றுகின்ற ஸம்ஸாரமாகிய சிறையை ; கழித்து - போக்கி ; மருள் - அந்திம காலத்தில் தீய நினைவுகளைத் தருகின்ற அஜ்ஞாநம் ; வான் - பரமபதம் ; வழி - அர்ச்சிராதி மார்க்கம் ; தெருள் - ஜ்ஞாநம் ; ஆரும் - நிறைந்து பிரகாசிக்கும் ; தெளி விசும்பு - சுத்த ஸத்துவமயமான பரமபதத்தை; கழல் - திருவடிகள்; வாழ - கைங்கரியம் செய்து வாழும்படி ; பெருவானில் - ஸ்ரீ வைகுண்டத்தில் ; கொள்வார் - ஏற்றுக்கொள்பவர்.]

அகலகிலாத் திருமகளா ரன்பர் வந்தா
ரடியிரண்டு மாருகத் தந்தார் வந்தார்
புகலில்லார் புகலாகும் புனிதர் வந்தார்
பொன்னுலகிற் றிருவுடனே திகழ்வார் வந்தா
ரகிலமெலா மானந்த மானுர் வந்தா
ரடியிணைக்கீழ் வைத்தடிமை கொள்வார் வந்தார்
பகனடுவே யிரவழைக்க வல்லார் வந்தார்
பகலொன்ரு யிரவழித்தார் வந்தார் தாமே. (7)

[அகலகிலா - கணமும்பிரியாத ; ஆருக - உபாயமாக ; புகல் - உபாயம் ; புனிதர் - பரிசுத்தர் ; பொன் உலகு - பரமபதம் ; அகிலம் - லீலா நித்ய விபூதியாகிய உலகங்கள் ; அழைக்க - கொணரும் ; பகல் ஒன்ருய் - முக்தியில் ஒரே பகலாய் ; இரவு - ஸம்ஸாரமாகிய இராத்திரி.]

தருமன்விடத் தாந்தூது போனுர் வந்தார்
தரணி பொறுத் திண்பாரந் தவிர்த்தார் வந்தா
ரருமறையின் பொருளனைத்தும் விரித்தார் வந்தா
ரஞ்சினநீ யென்னையடை யென்றுர் வந்தார்
தருமமெலாந் தாமாகி நிற்பார் வந்தார்
தாமேநம் வினையனைத்துந் தவிர்ப்பார் வந்தார்
பரமெனது நீபுலம்ப லென்றுர் வந்தார்
பார்த்தனுக்குத் தேரூர்ந்தார் வந்தார் தாமே. (8)

[தருமன் - தருமபுத்திரன்; தூதுபோனுர் - துரியோதனனிடம் தூதுசென்றவர் ; தரணி - பூமி ; விரித்தார் - ஸ்ரீபகவற் கீதை வாயிலாக விளக்கியவர் ; அடை - சரணமடைவாயாக ; தருமம் - உபாயம் ; வினை - கர்மங்கள் ; தவிர்ப்பார் - தொலைப்பவர் ; பரம் - உனக்குப் பலனை யளித்துக் காக்கவேண்டிய பொறுப்பு ; புலம்பல் - வருந்தாதே ; என்றுர் - என்று உறுதி கூறியவர் ; தேரூர்ந்தார் - தேரை ஒட்டியவர்.]

வஞ்சனைசெய் பூதனையை மாய்த்தார் வந்தார்
மல்லர்மத கரிமாள மலைந்தார் வந்தார்
கஞ்சனைப்போர் கடுஞ்சினத்தாற் கடிந்தார் வந்தார்
கண்ணுதன்முன் வாணன்றேள் கழித்தார் வந்தார்
வெஞ்சொறர வீடுகொடுத் துகந்தார் வந்தார்
விலக்கில்லா வழிநடத்த விரைந்தார் வந்தார்
பஞ்சவரைப் பலவகையுங் காத்தார் வந்தார்
பாஞ்சாலி குழன்முடித்தார் வந்தார் தாமே. (9)

[மாய்த்தார் - கொன்றவர் ; மல்லர் - முஷ்டிகன் முதலிய மல்லரும் ; மதகரி - குவலயாபீட மென்னும் மதயானை ; மாள - மாண்டுபோகும்படி ; மலைந்தார் - போர்செய்தவர் ; கடும் - கொடிய ; கடிந்தார் - கொன்றவர் ; கண்நுதல் - நெற்றிக்கண்ணைப் படைத்த சிவபிரான் ; வாணன் - பாணாஸுரன் ; கழித்தார் - அறுத்தார் ; வெம் சொல்தர - சிசுபாலன் கொடிய நிந்தைச்சொற் களைக்கூற ; வீடு - மோக்ஷம் ; உகந்தார் - மகிழ்ந்தவர் ; விலக்கு இல்லாவழி - தடையில்லாத அர்ச்சிராதி மார்க்கம் ; பஞ்சவர் - பஞ்சபாண்டவர்கள் ; பாஞ்சாலி - திரௌபதி ; குழல் - கூந்தல்.]

அத்திகிரி யருளாளப் பெருமாள் வந்தா
ரானைபரி தேரின்மே லழகர் வந்தார்

கச்சிதனிற் கண்கொடுக்கும் பெருமாள் வந்தார்
கருதவரந் தருதெய்வப் பெருமாள் வந்தார்
முத்திமழை பொழியுமுகில் வண்ணர் வந்தார்
மூலமென வோலமிட வல்லார் வந்தா
ருத்தரவே திக்குள்ளே யுதித்தார் வந்தா
ரும்பர் தொழுங் கழலுடையார் வந்தார் தாமே. (10)

[பரி - குதிரை; கச்சி - காஞ்சீபுரம்; கண் - ஜ்ஞாநக்கண்ணே; கருத - மநத்திலுல் அநுஸந்தித்தால்; தெய்வப்பெருமாள் - தேவச்சிரேஷ்டர்; முத்தி - மோக்ஷம்; முகில் - மேகம்; வண்ணர் - நிறமுடையவர்; மூலம் எனஓலம் இட - முதலேயால் பீடிக்கப்பட்ட கஜேந்திரன் ஆதிமூலமே என்று கூக்குரலிட; வல்லார் - அந்த யானேயைக் காக்கச் சக்தியுடையவர்; உதித்தார் - ஆவிர்ப்பவித்தவர்; உம்பர் - நித்யசூரிகள்; கழல் - திருவடி.]

மறைத்தலேயி லிசை யெழுத்தில் வணங்கும் வாக்கின்
மந்திரத்தி னுலெழுத்தாந் திருநா மத்தி
னிறைத்திலகு வேற்றுமையி லிரண்டா மொன்றி
னெடுமாறன் கீதையெலா நிறைந்த சொல்லி
னுறைத்தவர்கண் டுரைத்தபொரு ளான வெல்லா
முயர்விரத வருளாளப் பெருமா டேசின்
றிறத்திலியை திருச்சின்ன மாலே பத்துஞ்
செவிக்கினிதாஞ் சிற்றின்ப மிசையா தார்க்கே. (11)

[மறைத் தலேயில் - வேதங்களின் ஆரம்பத்திலும் முடிவிலும்; இசை - அமைந்த; எழுத்து - எழுத்தாகிய ப்ரணவம்; வாக்கு நமச்சப்தம்; மந்திரம் - திருமந்திரம்; திருநாமம் - நாராயண சப்தம்; நிறைத்து - பூர்த்திசெய்து; வேற்றுமை - நான்காம் வேற்றுமையில்; இரண்டுஆம் ஒன்றில் - இரண்டுபாகமாக யிருந்து ஒரு மந்திரமாயுள்ள துவயத்திலும்; சொல்லில் - சரம சுலோகத்திலும்; உறைத்தவர் - நன்கு பரிசயம் செய்த ஆசாரியர்கள்; உரைத்த - நமக்கு உபதேசித்த; உயர்விரதம் - சரணுகதரக்ஷண மென்னும் உயர்ந்த விரதத்தைக் கொண்டுள்ள; தேசின் - பெருமையின்; திறத்தில் - விஷயத்தில்; சிறுஇன்பம் - அற்பமான ஸம்ஸாரஸுகத்தை; இனிது - மதுரம்.]